விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது + IV — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 16 ஞாயிற்றுக்கிழமை (01.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 013

ரா ம் கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## மாகாணங்களுக்கு இணக்கப்பாட்டுடன் காணி, பொலிஸ் அதிகாரங்கள்

### அமைச்சர் வாசுதேவ யோசனை

**அரசியல் தீர்வில் மாகாணங்களுக்கு இணக்கப்பாட்டுடன் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். இதற்கான வழிமுறைகளைக் கையாண்டு அரசாங்கம் புது வருடத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வை வழங்கி விடும் என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**



உதாரணமாக சிறு குற்றங்களுக்கான பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்க வேணடும். காணி அதிகாரத்தில் மத்திய அரசிற்கும் மாகாண சபைக்கும் இடையில் பொது சுயாதீன ஆணைக்குழு ஊடாக அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். இதனை ஒரு யோசனையாகவே கூற விரும்புகிறேன்.

தமிழ் அரசியல் கட்சிகளுடன் அரசாங்கம் பரந்தளவில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றது. விரைவில் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக தீர்வு வந்து விடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தொடர்ந்தும் கூறுகையில்,

அரசியல் தீர்வு என்பது நாட்டிற்கு அத்தி யாவசியமான விடயமாகவே காணப் படு கின்றது. இதனால் தான் அரசாங்கம் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சி களுடன் பரந்த (19ஆம் பக்கம் பார்க்க)

2012
புத்தாண்டு வாழ்த்துக்கள்
2012 புத்தாண்டில் வாசகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள் மற்றும்
அத்தனை அன்புள்ளங்களுக்கும் எமது இனிய
புத்தாண்டு வாழ்த்துக்கள்.

## 70 முன்னாள் போராளிகள் ஜனவரி 22இல் விடுதலை

(கொழும்பு)

தடுத்துவைக்கப்பட்டுள்ள போராளிகளுள் மேலும் ஒரு தொகுதியினர் ஜனவரி மாதம் 22ஆம் திகதி விடுதலை செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை பெற்றோர் உறவினர்களிடம் ஒப்படைக்கும் வைபவம் மட்டக்களப்பு நகரசபை மண்டபத்தில் இடம்பெறும் (19ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் யாழில் அதிகரிப்பு; தடுப்பதற்கு புதிய சட்டம்

### அமைச்சர் கரலியத்த தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவோரை வாழ்நாள் முழுவதும் சிறைவைக்க வேண்டும். அப்போதுதான் இவற்றைக் கட்டுப்படுத்த முடியும் 'என சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் விசேட பிரேரணையை முன்வைத்து சட்டம் ஒன்று இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சும் யுஆர் பிரெண்ட் பவுண்டேஷன் நிறுவனமும் இணைந்து நேற்றுமாலை யுஆர் பிரெண்ட் பவுண்டேஷன் நிறுவனத்தில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை, இளவயது கர்ப்பம் என்பன யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வருகின்றது என்பதை பத்திரிகைச் செய்திகள் ஊடாக அறிந்து கொண்டேன்.

இதில் சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களுக்கு எதிரான வன்முறை என்பவற்றை கட்டுப்படுத்த (19ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளை குற்றம் சுமத்துவதால் இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படாது!

### நியூயோர்க் ரைம்ஸ் சுட்டிக்காட்டு

தமிழீழ விடுதலைப்புலிகளை குற்றம் சுமத்திக் கொண்டிருப்பதால் மாத்திரம் இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படாது என்று நியூயோர்க் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

அரசியல் ரீதியில் தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்க வேண்டும். அத்துடன் அரசியல் பேதங்களை களைய வேண்டும். இவற்றை மேற்கொள்ளாதபோது இலங்கையில் உண்மையான நல்லிணக்கத்தை, சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்று நியூயோர்க் ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் அதன் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் போரில் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டதுடன் பலர் அவயவங்களை இழந்துள்ளனர். ஆனால் இலங்கை அரசாங்கம் போரினால் பொது மக்களுக்கு பாதிப்புகள் ஏற்படவில்லை என்று முன்னர் கூறி வந்தமை குறிப்பிடத் தக்கது.

எனினும் தற்போது போரின்போது பொது மக்களுக்கு (02ஆம் பக்கம் பார்க்க)

## பெறுபேறு குளறுபடி; ஆராய குழு நியமனம்

(கொழும்பு)

அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறு தொடர்பான குளறுபடிகள் குறித்து ஆராய்வதற்கு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் தாரா வைத்தியதிலக தலைமையில் ஐவர் கொண்ட குழுவொன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஷானிகா ஹிரும்புருகம, மொரட்டுவ பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆனந்த ஜெயவர்த்தன, ஊவா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரஞ்சித (19ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிப் போரில் 1, 200 பொதுமக்களின் மரணங்களுக்கு படையினரே பொறுப்பு

### அடித்துக்கூறுகிறார் பேராசிரியர் றொகான் குணரட்ன



(கொழும்பு)

போரின் இறுதிக் கட்டத்தில் ஆயிரத்து 200 பொதுமக்கள் படையினரின் தாக்குதல்களில் கொல்லப்பட்டது உண்மையே என்று சிங்கப்பூரைத் தளமாக கொண்ட தீவிரவாத ஆய்வு மற்றும் அரசியல் வன்முறைகள் குறித்த சர்வதேச நிலையத்தின் தலைவர் பேராசிரியர் றொகான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய புலமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் வெளிநாட்டு மண்ணில் விடு தலைப் புலிகளைத் தோற்கடித்தல் என்ற பொருளில் நிகழ்த்திய உரையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

போரின் இறுதிக் கட்டத்தில் 7 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டதாக சில அமைப்புகள் சொல்கின்றன. (19ஆம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

பயனீர் அக்ரோ ரெக்ஸ்
PIONEER AGRO TEX
சல்வார் ரகங்கள், சாரி ரகங்கள், வேஷ்டி ரகங்கள்,
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து
மொத்த வியாபாரம் செய்பவர்கள்.

சைனா வீதிக்கு அருகில்
பிரைம் பிளாசா
261/19, பிரதான வீதி,
கொழும்பு-11

M:- 077 1077215
Ph:- 011 2394906
pmsandco@yahoo.com

Near China Street,
PRIME PLAZA
261/19, Main St.,
Colombo-11

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
மலரும் புது வருடம் சாந்தி, சமாதானம், சுபீட்சம் மிக்க ஆண்டாக மலர
வாழ்த்துகிறோம்

SINGER Plus
யாழ் மண்ணின் பரம்பரை தோழன்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம் மானிப்பாய் நெல்லியடி சாவகச்சேரி கிளிநொச்சி சங்கானை

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காரைநகர் வியாவில் ஐயனார் கோயில் காரைநகரைச்சேர்ந்த புற்று நோயாளருக்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வு

இடம்- கணபதீஸ்வரக் குருக்கள் நூல்நிலையம்
வியாவில் ஐயனார் கோவில் காரைநகர்.
காலம்- 01.01.2012.
காலை 10 மணி.
(ஞாயிற்றுக்கிழமை).
விருந்தினர்கள்-புற்றுநோய் வைத்திய நிபுணர்
வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமார்
உயர்திரு.ப.விக்னேஸ்வரன் வடமாகாண கல்விப்
பணிப்பாளர் யாழ்ப்பாணம்.
திருமதி ஜோய் மகிழ்தேவா.
மாவட்ட நீதிபதி ஊர்காவற்துறை.
பரோபகாரி ஆர்.சுந்தரராஜன். (இலண்டன்)
இந்நிதி உதவி இலண்டன் வாழ் கொடைவள்ளல்.
VB& Son's
உரிமையாளர் கொடை வள்ளல்
NADDU-NADUWANI அவர்கள்
நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.
தேவஸ்தானம்
வியாவில் ஐயனார் கோயில் காரைநகர்.

விளம்பர அனுசரணை : கஜமுகன் காட்வெயர்ஸ்
ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
(சி-5396)

# விடுதலைப் புலி...

பாதிப்புக்கள் ஏற்பட்டன என்பதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள ஆரம்பித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க ஆணைக்குழு பொதுமக்களின் பாதிப்புக்கள் குறித்து தமது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள து. இந் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆயிரக்கணக்கானோர் தமது சாட்சியங்களை பதிவுசெய்திருந்தனர்.

தமது உறவுகள் கொல்லப்பட்டமை காணாமல் போனமை கடத்தப்பட்டமை சரணடைந்தமை உட்பட்ட முறைப்பாடுகள் அதில் அடங்கியிருந்தன.

இறுதிப்போரின் போது அரசாங்கம் அறிவித்த பாதுகாப்பு வலயங்களுக்குபொதுமக்களுடன்விடுதலைப் புலிகளும் சென்றனர்.

இதனையடுத்து கனரக ஆயுதங்களினால் இலங்கைப் படையினர் குறித்த பாதுகாப்பு வலயங்களின்மீது தாக்குதல் நடத்தினர் இதனால் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டனர். இதற்கு சாட்சியங்கள் இருக்கின்ற போதும் அவை வெளிப்படுத்த முடியாத சாட்சிகளாக உள்ளன

போரின் போது தாம் பாரிய கஷ்ரங்களைஅனுபவித்ததாகமருத்துவர் ஒருவரை கோடிட்டு நியூயோர்க் ரைம்ஸ் மேற்படி கருத்துக்களை வெளியிட்டுள்ளது. (பா)

## மலிவு விற்பனை

பாடசாலை உபகரணங்கள், அழகுசாதனப் பொருட்கள் மிகவும் மலிவு விலைகளில்
அப்பியாசக் கொப்பிகள் - 120பக்கம் 15/=, 160பக்கம் 20/=, 200பக்கம் 25/=, Music Card - 60, Photocopy Both side - 3/=, Laser Print - 05/= மற்றும் கணனி உதிரிப்பாகங்கள்.
STR MULTY CENTER, 45A, Adiyapatham Rd, Thirunelvely. T.P. 021-4923443, 0777570150


## Galaxy Cabs
**021 - 3201201**

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது புது வருட நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

## பமிலி சுப்பர்



## ஸ்பொட்



**யாழ் வீதி,**
**மானிப்பாய்.**



எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது புது வருட நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

## மணி ஐய்ப்பா
நகைப் பூங்கா



A9, வீதி,
கிளிநொச்சி.
T.P.:- 021 2280067

172/A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:- 077273 5406
(C-5398)

## SK வயோதிபர் இல்லம்
## அறிவியல் நகர், கிளிநொச்சி

ப.இல. GA 2594

03.01.2012 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ள மேற்படி இல்லத்திற்கான முதியவர்களைத் தெரிவு செய்வதற்கான தகைமை பரிசீலனை நாளை 02.01.2012 திங்கட்கிழமை 10 மணியளவில் மேற்படி இல்லத்தில் நடைபெற உள்ளதால் வதியவிரும்புபவர்களை கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு :- இவ் இல்லத்தில் வதிபவர்களிடம் இருந்து எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

தொடர்பு :- க.இராசேந்திரம் : 0770757434
சி.இருதயராசா : 0714419204
தா.நிகேதன் : 0778394113
(சி-5397)

## ENGLISH CLASS

Sponser மூலம் UK செல்பவர்களுக்கான A1, வகுப்புக்கள் Student Visa மூலம் UK செல்பவர்களிற்கான B1 வகுப்புக்கள் மற்றும் ஆங்கில வகுப்புக்கள் (பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்) அனைத்து வகுப்புக்களும் மிகக் குறைந்த கட்டணத்தில்.


**ஆரம்பம் : 05.01.2012**
**இடம் : Temple Road**
TP. : 077152187, 0779919584
(7098)

## மணமகன் தேவை

தீர்க்கசுமங்கலி திருமணசேவை
72, அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
யாழ். இந்து கௌரவ 1984 புனர் பூசம் கி.பா. 74 செவ்வாய் தோச மற்ற Doctor மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.
தொடர்புக்கு
**0776627047**
(7099)

## கண்ணீர் அஞ்சலி

31.12.2011 இல் அகாலமரணமடைந்த துணுக்காய்ப் பகுதி
பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் முன்னாள் கிளை
முகாமையாளர்



**அமரர் நவரட்ணம்கணேசமூர்த்தி**
(இல. 368, திருநகர், மல்லாவி, யோகபுரம்)

அவர்கள் அகாலச் சாவடைந்த செய்தி அறிந்து அதிர்ச்சி அடைவதோடு அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

துணுக்காய் பகுதி,
பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்,
துணுக்காய்.

தலைவர், இயக்குநர் சபை,
பொதுமுகாமையாளர்,
பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.
(C-5394)

## கிறிஸ்ரல் சென்ரர்

A/L Day, 2012, 2013, 2014 ஆரம்பம் 03.01.2012 மு.ப. 9.00 மணி
யாழ்.முன்னணி ஆசிரியர் குழு

| கலை, வர்த்தகம் | | கணித, விஞ்ஞானம் | |
|---|---|---|---|
| பொருளியல் | S.வரதராஜன் | இரசாயனவியல் | P.பத்மநாதன் |
| வணிகக்கல்வி | B.S.பசில் | பௌதிகவியல் | M.ஸ்பெல்மன் |
| கணக்கீடு | D.Sam | | V.மணிவண்ணன் |
| தமிழ் | M.நாகதமிழிந்திரன் | இணைந்த கணிதம் | T.தவசேகர் |
| இந்துநாகரிகம் | V.யுகசீலன் | | K.யோகன் |
| அளவையியல் | S.ஸ்ரீராம் | | |
| புவியியல் | M.செல்வா | | |
| வரலாறு | S.சுஜிகரன் | | |

(5393)

## தேவை

80 வயதான தாயாரைத் தங்கியிருந்து பார்ப்பதற்கு ஓர் பெண் உதவியாளர் தேவை. எல்லா வசதிகளும் செய்து தரப்படும்.
தொடர்பு : 0779401002
சரவணா அச்சகம்
233, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(5395)

## Pasupathy Natural Medical Centre-Kaithady

நவீன மருத்துவ அறிவுடன் சித்த, ஆயுள்வேத சிகிச்சைகளும், ஆலோசனைகளும் இல்லம் வந்து வழங்க தயாராகவுள்ளோம்.
எங்கள் விசேட சேவைகள் யாருக்கெல்லாம்?

1. நடக்க அவதிப்படும் பாரிசவாத நோயாளி
2. வேதனையில் துடிக்கும் முடக்கு, மூட்டுவாத நோயாளி
3. கை, கால் விறைப்பு, அடிபட்டவலி
4. நசியசிகிச்சை - சளி, தும்மல், இருமல், நாட்பட்ட தலைவலி நீக்கல்

Physiotherapy
Oid Massagetherapy
Internal Medication

Dr.S.P.Thavakeethan
B.S.M.S (S.L)
Dip.In.HRts, Reg No : 12781

T.P. No: 0213201636
Hot Line - 0771739081
(7094)

## வீடு விற்பனைக்கு

யாழ். நகர மத்தியிலிருந்து 200M தூரத்தில் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள புதிதாக கட்டப்பட்ட சகல வசதிகளுடன் சுவடிய மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
**077 162 2213**
(7068)

"கற்பவை கற்க; கற்பவை கசடறக் கற்க"
## YAALH ENGLISH ACADEMY
நிறுவுநர் + ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

**Practical English Courses**
- ஆசிரியர்க்கு
- உத்தியோகத்தர்க்கு
- உயர்கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- தாய்மார்க்கு: உங்கள் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கும் பெரும் பயன்.

ஆரம்பம் : 21.1.2012 / இலவசம் : முதலிரு வகுப்புக்கள்
முழுவிபரங்கள் பெற + பெய[illegible]திவு செய்ய : 077 3212 711
வகுப்பிட [illegible]சரணை
புதிய உ[illegible] கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ் நகர்
(7044)

airtel

live online

முற்கொடுப்பனவு data top-up களுடன்

| | | |
|---|---|---|
| நாளாந்தம் | 150MB மற்றும் 45 SMS | ரூ. 45 |
| வாராந்தம் | 250MB மற்றும் 78 SMS | ரூ. 78 |
| மாதாந்தம் | 1024MB மற்றும் 299 SMS | ரூ. 299 |
| | 3072MB மற்றும் 799 SMS | ரூ. 799 |

Mobile Internet Zone பற்றி அறிய உங்கள் airtel தொலைபேசியில் (கட்டணமின்றி) 55525 ஐ டயல் செய்யவும்.




மலரும் புத்தாண்டில்
சமாதானம் மலரட்டும்

AkzoNobel பெயின்ற் வகைகளின்
யாழ்ப்பாண விநியோகஸ்தர்கள்

சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்

70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
கண்டி வீதி, சாவகச்சேரி

சிவகுமரன் என்ரபிறைஸ்

75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

Dulux

Midea Electro Mart
Midea PC Show Room

LG Authorized Dealer for Abans Ltd.

வாடிக்கையாளர்களுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்



No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.
Tel: 021-2224566
Fax: 021-2221646

e-mail:midea21@gmail.com
www.mideamart.com

NO.4, NEW MARKET, CHAVAKACHCHERI.
Tel: 021-2270268
Fax: 021-2270129

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்



கட்டடப்பொருட்கள், மிற்சுயி நிப்போன் சீமெந்து,
Akzonobel பெயின்ற் வகைகள்
(எமர்சன், எனமல், நிக்கோல், டியூகோ),
நஷனல் பி.வி.சி (National PVC) குழாய்கள்
மற்றும் எமது நிறுவனத்தால் யாழ்ப்பாணத்தில்
தயாரிக்கப்பட்ட தரமான முட்கம்பிகள்
என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய
ஒரே இடம்.




கஜமுகன் ஹாட்வெயர்

147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல: 021 222 2833

# திருவாசகம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி தடங்கன் புளியடி முருக மூர்த்தி ஆலயத்தின் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆலயத்தில் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபை தலைவர் பொ.கதிரமலை அறிவித்துள்ளார். (அ)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய இலங்கைத் தமிழியல்-சில பதிவுகள், நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்னும் இரு நூல்களின் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்தபரமாச்சார்ய சுவாமிகளும் வாழ்த்துரையினை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மற்றும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அதிபர் வேல்.சிவானந்தன் ஆகியோரும் ஆற்றவுள்ளனர்.

அத்தோடு வெளியீட்டுரையை திருகோணமலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி சி.சிவநிர்த்தானந்தா மற்றும் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேலும் ஆற்றவுள்ளனர். (அ)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

புளியங்குளம் சந்தியில் இருந்து நெடுங்கேணி ஊடாக ஒட்டுசுட்டான் செல்லும் வீதியானது சேதமடைந்துள்ளதால் பயணிக்க முடியாத நிலையுள்ளது.

மேற்படி வீதியால் தினமும் பலநூற்றுக் கணக்கான பொதுமக்களும் வாகனங்களும் பயணிக்கின்றன. முல்லைத்தீவு நகரத்திற்கும் வவுனியா நகரத்திற்கும் பயணிக்கின்ற மக்கள் மேற்குறித்த வீதியால் செல்கின்ற போது பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இங்கு வீதி அகலிப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதும் வேலைகள் துரிதகதியில் இடம்பெறாமையினால் பயணிக்க முடியாத நிலையுள்ளது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியை வெகுவிரைவில் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-15)

# அரச ஊழியர்களுக்கான வீட்டுத்திட்ட உதவிகள் போதுமானதாக இல்லை

## வன்னி அரச ஊழியர்கள் விசனம்

நிர்மாணத்துறை பொறியியல் சேவை வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சும் மீள் குடியேற்ற அமைச்சும் இணைந்து ஜனசெவன என்னும் அரச உத்தியோகத்தர்களுக்கான வீடமைப்பு திட்டத்தை செயற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஏ-9 வீதிக்கு அருகில் உள்ள பனிக்கன்குளம் கிராமத்திலும் வவுனியா மாவட்டத்தில் ஈரபெரிய குளத்திலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கோணாவில் கிராமத்திலும் இத்திட்டம் ஆரம்பித்து செயற்படுத்தப் பட்டு வருகின்றது.

இத்திட்டத்திற்காக மானியத்தொகையாக ஒரு இலட்சம் ரூபாவும் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் ஊடாக 2 இலட்சம் ரூபாவுழ் 21 அடி நீளமும் 21 அடி அகலமும் கொண்ட வீட்டை அமைப்பதற்கு மானியத் தொகை இதுவரை 25 ஆயிரம் ரூபா மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

இம்மானியமானது வன்னியில் இடம்பெயர்ந்த அரச உத்தியோகத்தருக்கே வழங்கப்பட்டுள்ளது. வீடமைப்பு அதிகாரசபையின் கடன் 22 பேருக்கு 40 ஆயிரம் ரூபாவும் 6 பேருக்கு ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்ட நில்லயில் மிகுதியானவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

ஆயினும் இப்பணத்தைக் கொண்டு வீடமைக்க முடியாதென பயனாளிகள் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில், சாதாரண பொதுமக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் வீடமைக்க 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா வழங்கியும் போதாமல் தற்போது மீண்டும் ஒரு இலட்சம் ரூபாவை வைப்பிலிடுகின்றனர். இடம்பெயர்ந்து அனைத்தையும் இழந்தநிலையில் இருக்கும் எமக்கு எதுவுமே செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது.

இதைவிட எமக்கு 50 வீடுகளுக்கு ஏ- 9 வீதியில் இருந்து மூன்று பிரதான வீதிகள் எமது வீடுகள் ஊடாக அமைத்து தருவதாக கூறப்பட்டது. ஆயினும் அவ்வேலைகள் நடைபெறவில்லை. 4 பாலங்கள் அமைப்பதற்கு தலா ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டது. ஆனால், அந் நிதி வேலை நடைபெறாமையால் வருட இறுதிக்குள் திருப்பி அனுப்பப்படவுள்ளதாக அறிய முடிகின்றது எனவும் பயனாளிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் பனிச்சன் குளத்தில் ஆரம்பிக்கப் பட்ட திட்டத்தில் பல குறைபாடுகள் காரணமாக வேலைகள் நடைபெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

50 குடும்பங்களுக்குஅரை ஏக்கர் காணி வீதம் வழங்கப்பட்டு 44 குடும்பங்கள் வீடமைப்பை ஆரம்பித்துள்ளனர். எனவே சம்பந்தப் பட்ட அதிகாரிகள் தமக்கு உதவ வேண்டுமென அப்பயனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-15)

# இராசி பலன்

01.01.2012
(மார்கழி 16, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
அட்டமி பின்னிரவு 3.02 மணிவரை
உத்தரட்டாதி பிற்பகல் 3.05 மணிவரை
இராகுகாலம் 4.59-6.29 மணிவரை
சுபநேரம் 9.29-10.59 மணிவரை
ஆங்கில புதுவருடப்பிறப்பு.

**மேடம்** பொழுது போக்கு விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படும், ஆடம்பரப் பொருட்கள் வாங்கும் எண்ணம் தோன்றும், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**இடபம்** உறவினர் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும், காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** கொள்கைப் பிடிப்போடு செயற்பட்டு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள், விட்டுப் போன பணியைத் தொடரும் எண்ணம் மேலோங்கும், அந்நியர்களின் உதவிகள் கிடைக்கலாம்.

**கடகம்** மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புதிய சொத்துக்கள் வாங்குவதில் நாட்டம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உறவினரின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, கௌரவக் குறைவான நாள்.

**கன்னி** குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை அமையலாம், சுற்றத்தார் வரவால் சுகங்கள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** நல்ல செய்திகள் நாடி வரும் நாள், விருந்தினர் வருகையுண்டு, உடல் நலம் சீராகும், அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், உற்சாகத்துடன் செயற்பட்டு காரியம் சாதிப்பீர்கள்.

**விருச்சிகம்** வரவுகள் எதிர்பார்த்தபடியே வந்து சேரும், தொலைபேசி வழித்தகவலால் மகிழ்ச்சியடைவீர்கள், பூர்வ புண்ணிய கருமங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** தாராளமாகச் செலவு செய்து மகிழ்வீர்கள், நேர்மையான நண்பர்களால் நம்பிக்கைக்குரிய காரியங்கள் நடைபெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், சிந்தனை மிகுதியான நாள்.

**மகரம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவிகள் கேட்டு வரலாம், பிரிவினைகள் சுமுகமாக முடியும், சகோதரத்தின் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொருளாதார நிலை உயரும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மீனம்** வாக்கு சாதுரியத்தால் வளம் காணும் நாள், மாலை நேரப்பயணம் மகிழ்ச்சி தரும், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு, போசன சுகமுண்டு, இறை நம்பிக்கையில் நாட்டம் கூடும்.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## மனம் மாற வேண்டும்

"மனிதன் ஏன் சேர் திருடுகிறான்?"

"அவனுக்கு ஏதோ தேவைப்படுகிறது... அதனால் அவன் திருடுகிறான்"

"தேவை இருக்கிற எல்லோரும் திருடுவது இல்லையே"

"மனம் உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு விடுகின்றது. அதனால் ஆறு வகையான கெட்ட குணங்கள் மனிதனுக்கு ஏற்பட்டுள்ளன"

"அவை என்னென்ன குணங்கள்"

"பேராசை..., கோபம்...,மமதை..., கருமித்தனம்...,முறையற்ற காம உணர்வு, பழிவாங்கும் தன்மை இந்த ஆறுவகையான தீய குணங்களுமே ஐந்து வகையான பாவங்களைச் செய்வதற்கு தூண்டுகின்றது. அந்தக் குணங்கள் எது என்றால் பொய் பேசுவது, திருடுவது, சூதாடுவது, கலப்படம் செய்வது, கொலை செய்வது பேர்ன்ற குற்றங்கள்தான்..."

"இவற்றிற்கு என்ன செய்வது?"

"மனதை சரி செய்ய வேண்டும்? சூழ்நிலை தியானம். அதுபோன்ற மாதிரிப் பயிற்சி மூலமாக மனதை சக்தியுள்ளதாகவும் தெளிவுள்ளதாகவும் மாற்றியமைக்கலாம்"

"அப்படியா?"

"ஆமாம். தீய குணங்களை நல்ல குணங்களாக மாற்றிக் கொள்ளலாம்... பேராசை, திருப்தியாக மாறும்... கோபம் பொறுமையாக மாறும்... மமதை சமத்துவ குணமாக மாறும்... பழிவாங்கும் குணம் விட்டுக் கொடுக்கும் குணமாகவும்... முறையற்ற காமம் கற்பு நெறியாகவும்... மாறும்"

"எல்லோரும் அப்படி மாறவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை"

"அதுசரி... இன்று ஏன் திடீரென்று வந்து திருட்டைப் பற்றி விசாரிக்கிறீர்கள்"

"பாருங்கள் சேர்... எனது காலை"

"என்ன இது... ஒரு காலில் மட்டும் செருப்பு போட்டு இருக்கிறீர்கள் எங்கே இருந்து வருகிறீர்கள்"

"ஒரு கல்யாண மண்டபத்தில் இருந்துதான் வருகிறேன்"

"இன்னொரு செருப்பு எங்கே? காணாமல் போய்விட்டதா...?"

"இல்லை"

"என்ன நடந்தது?"

"இது ஒன்றுதான் எனக்கு மிகுதியாகக் கிடைத்தது"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 125 | 160 | 130 |
| உருளைக்கிழங்கு | 65 | 70-120 | 80 |
| பச்சைமிளகாய் | 160 | 240 | 200 |
| தக்காளி | 200 | 260 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 40 |
| கோவா | 90 | 100 | 100 |
| கரட் | 80 | 160 | 120 |
| பூசணி | 60 | 70 | 60 |
| புடோல் | 60 | 100 | 60 |
| வாழைக்காய் | 45 | 60 | 45 |
| சின்ன வெங்காயம் | 50-80 | 90 | 90 |
| பெரிய வெங்காயம் | 65 | 100 | 70 |
| பாகற்காய் | 120 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 90 | 90 |
| கரணைக்கிழங்கு | 70 | 70 | -- |
| பயற்றங்காய் | 160-190 | 200 | 200 |
| லீக்ஸ் | 60 | 100 | 80 |
| பீற்றூட் | -- | 110 | 120 |
| கறிமிளகாய் | -- | 280 | 200 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | -- | 160 | 120 |
| கத்தரி தம்புள்ள | 70 | 130 | 90 |
| கீரை - 1 பிடி | 15-20 | 30 | 30 |
| தேசிக்காய் | 70 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 25 | 25 |

**A/L பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தியின்மையா?**

நீங்களும் British Qualified Engineer / Quantity Surveyor ஆவதற்கு APSS International வழி வகுக்கின்றது.

**City & Guilds**

**June 2012** பரீட்சைக்கான APSS International இன் பொறியியல் வகுப்புக்கள்

- Telecommunication Engineering
- Electrical & Electronic Engineering
- Civil Engineering/Quantity Surveying

ஆரம்பம்
1ம் பிரிவு 08/01/12 / 2ம் பிரிவு 15/01/12

**January 10** வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

யாழ் மாணவர்களின் நன்மை கருதி தமிழ்மொழி மூலம் விளக்கங்கள் கொடுக்கப்படும்

எதிர்வரும் ஜனவரி 10ம் திகதி நடைபெறவிருக்கும் இலவச கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்

(7078)

APSS International Networks (Pvt) Limited

யாழ் நகரில்: JTI, 46, Clock Tower Road, Jaffna. T.P:071-8561654

கொழும்பில்: 5 Harmers Avenue, Colombo 06. T.P: 011-2361587

Hot Lines: 077-3867695, 077-2306642, 021-2241731



**வெளிநாட்டு பொதிகளிற்கான மாபெரும் விலைச் சலுகை**



**01.01.2012 - 14.01.2012**

வாடிக்கையாளர்களுக்கு எம் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

10 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும்

UK 625 /= Germany 710/= France 765/=

மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் எடை கூடிய பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.

குறிப்பு :- 25Kg - 100 Kg வரையான பொதிகளுக்கு 550/= மட்டுமே

சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் மற்றும் இணைந்த சேவைகள்.

உலகின் முன்னணி கூரியர் சேவை நிறுவனத்தின் முகவர்

**Arrul Global Express**

International Courier & Cargo Service

இல.1 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.

T.P : 021 222 6113 (சி-5392)


## புதுவருட வாழ்த்துக்கள்


# KALAIMAGAL International College

இலங்கை கல்வித்துறையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ளும் மாணவர்கள் செறிந்து வாழும் வட பகுதியில் சர்வதேச மொழியான ஆங்கிலத்தின் புலமை சுமார் 25 வருடங்களாகத் தொலைக்கப்பட்ட அல்லது அக்கறை கொள்ளாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

(சி-5389)



இன்றைய உலகமயமாக்கலில் ஆங்கில அறிவு மிக மிக இன்றியமையாததாகக் காணப்படுவதனால் ஆங்கில மொழி மூலக் கல்வியின் அவசியம் காலத்தின் கட்டாயமாகும். இதனைக் கருத்திற்கொண்டு எமது கல்லூரி வட பகுதியில் ஆங்கிலமொழி மூலக் கல்வியை உள்வாங்கும் பொருட்டு பல இடங்களில் தனது கிளைகளை நிறுவியுள்ளது. எமது கலைமகள் சர்வதேச கல்லூரியின் சிறப்பான செயற்றிட்டங்கள் வருமாறு:

- பாலர் வகுப்பு முதல் க.பொ.த. (உ/த) வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவு செய்யப்பட்ட முழுநேர தனியார் பாடசாலை ( English Medium )
- சிறந்த ஆங்கில மொழி மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.
- சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- பிரத்தியேக சீருடை
- சாதாரண மக்கள் முகம்கொடுக்கக்கூடிய மிகக் குறைந்த அளவு கட்டண வசதி
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழி மூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலம் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் கற்பிக்கும் கல்விக் கொள்கை.
- அரச பாடசாலைகளின் நேரசூசி அமைப்பு.
- விளையாட்டு, கலை, கலாசாரம் நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடுகளாக உள்வாங்கும் கல்விக்கொள்கை.
- மாணவர்களை உற்சாகப்படுத்தும் வருடாந்த பரிசளிப்பும், கலைவிழாக்களும்.

**அனுமதிக்கு இன்றே முந்துங்கள்**

மேலதிக விபரங்களுக்கு எமது தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்:


**KALAIMAGAL International College**

CHURCH LANE, KOKUVIL EAST, KOKUVIL.

T.P.:021 4923235, 0778834592, 0774904286, 0776548283

அன்பர்கள் , நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# TILKO JAFFNA CITY HOTEL






உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ்.நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம் சிறிய, நடுத்தர, பிரமாண்டமான குளிரூட்டப்பட்ட குளிரூட்டப்படாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள், திருமண, பிறந்தநாள் கொண்டாட்டங்கள், வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய,இரவு பொதி செய்யப்பட்ட உணவுவகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

- இந்தியா, சீனா மற்றும் யாழ்.பாரம்பரிய உணவுவகைகளும் ஒரே இடத்தில்...
- உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ்.நகரில் முதன்மையான இடம்.

TILKO HOTEL இல்

## Barbeque

வசதியுடனான

பூந்தோட்ட உணவகம்

திறக்கப்பட்டுள்ளது.






Special Package Rate for:
Family Get- togethers, Birthday,
Anniversary Functions,
company Get- togethers

A place to relax and end enjoy delicious meal
Every sundays Special Buffet lunch
at our exclusive **'priya'** restaurant

**Vegetarians Buffet Lunch RS 500/- All inclusive**
**Non vegetarian Buffet Lunch Rs 700/- All inclusive**



**70/6, K.K.S ROAD,JAFFNA.**
**(Next to Jaffna Main Post Office)**
**T.P:021 222 5969**
**T.P:021 720 0707**
**Fax:-021 222 72 91**

**Web:cityhoteljaffna.com**
**e-mail:info@hoteljaffna.com**

# சஜித்தும் கருவும் இணைந்து தனிக்கட்சியமைக்க திட்டம்?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி கிளர்ச்சியாளர்கள் தனிக்கட்சி ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கரு ஜயசூரிய ஆகியோர் இணைந்து புதிய கட்சியை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளனர்.

எவ்வாறெனினும் கட்சித் தலைமைப் பதவிக்காக வாக்கெடுப்பு நடத்துவது என்ற யாப்பு திருத்தத்தில் மாற்றங்களை கொண்டு வர ரணில் தரப்பினர் முயற்சித்தால் அதற்கு இடமளிக்கப்படமாட்டாது என கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

சஜித் பிரேமதாஸ தரப்பினரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைய கட்சியின் யாப்பில் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தல் அல்லது புதிய கட்சி அமைத்தல் ஆகிய இரு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கிளர்ச்சிக்குழு உறுப்பினர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(அ-2)

## முல்லைத்தீவு மாவட்டத்தில்
# ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளில் மட்டும் மக்கள் மீள்குடியமர வேண்டும்
## முல்லை.அரச அதிபர் தெரிவிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவுமாவட்டத்தில்உள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் இன்னும் ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளில் மட்டுமே மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளது என முல்லை மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு, மந்துவில், மல்லிகைத்தீவு, சிவநகர், ஆனந்தபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள வெடிபொருட்கள் அகற்றும் பணி மிக வேகமாக நடைபெறுகின்றது எனவும் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் இக்கிராமத்தில் மக்கள் குடியேற்றம் செய்யப்பட்டு விடுவார்கள் என தெரிவித்தார்.

மேலும் இடம் பெயர்ந்து தற்பொழுது மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 6 மாதத்திற்குட்பட்ட குடும்பங்களுக்கு மார்கழி மாதத்திற்கான உலக உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.


அத்தோடு இலகு வேலைக்கான கொடுப்பனவு என்பன வழங்கப்படுவதா கவும் இவை 5 பிரதேச செயலகங்களிலுள்ள பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்படுகிறது. எனவே, இக் கொடுப்பனவை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

## சுற்றுலா பயணியிடம் பணம் கொள்ளை

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ரஷ்ய சுற்றுலாப் பயணியின் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. சிகிரியாவில் அமைந்துள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த போது இவரது பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு இலட்சம் ரூபா பணம் களவாடப்பட்டுள்ளதாகவும் இந்தச் சம்பவம் குறித்து ஹோட்டல் நிர்வாகத்திடமும் பொலிஸாரிடமும் சுற்றுலாப் பயணி முறைப்பாடு செய்துள்ளார். ஹோட்டல் அறையில் இருந்த பணமே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்
## புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றோம்



17.12.2011 சனிக்கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விருது வழங்கும் விழாவில் **கலாபூஷணம்** விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட நாடகக் கலைஞர் **இராசையா பீதாம்பரம் (பற்குணம்)** அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் சகல சௌபாக்கியங்களைப் பெற்று நீடூழி காலம் வாழ்ந்து கலைத்துறைக்கு தமது சேவையை ஆற்ற வேண்டும் எனஇறைவனை வேண்டுகின்றோம்.

**இராசையா பீதாம்பரம் (பற்குணம்)**

(சி-5383)

வாழ்த்துவோர்:-

வேணுகா தொலைத் தொடர்பு நிலையம்
இல. 964, K.K.S வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

தொ.பே:- 021 222 2541
077 5473126



## புதுவருட வாழ்த்துக்கள்

புதுவருடத்தை முன்னிட்டு இலங்கை வங்கி 2 ஆம் கிளை முகாமையாளர், உத்தியோகத்தர்கள்,
இராஜேஸ்வரிபுடைவையகம்-மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், குமரன் மரக்காலை நாச்சிமார் கோவிலடி,
சிங்கர் கொம்பனி, ஸ்ரான்லி றோட்

வாழ்த்துவோர்:-

இ.சிறிதரன்
வேணுகா கொமினிகேசன்
இல. 964, K.K.S வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தொ.பே:- 021 222 5076
077 5473126

(சி-5302)



அதிஷ்டங்கள் நிறைந்த
எதிர்பார்ப்புகள் நிறைவேற
வெற்றிகளை கொண்டுவர
முன்னேற்றத்தின் பங்களிப்பை வழங்கிடும்

# 2012

நூறாண்டுகளுக்கும் மேலாக கொண்டுள்ள நம்பிக்கை, ஸ்திரத்தன்மை எதிர்காலத்திலும் தொடர்ந்தும் அவ்வாறே உங்கள் உள்ளங்களில் நிலைநிறுத்த நாம் உறுதி கொண்டுள்ளோம். பிறந்துள்ள 2012 உங்கள் பொருளாதாரத்தினை மேலும் வலுப்படுத்தி, உங்களை மேலும் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என நாம் மனதார வாழ்த்துகின்றோம்.

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

(சி-5393)

HNB

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### பனிமுடி தரிக்கும் புற்கள்

காய்ந்து கருகி
கோடையில்...
காணாமற்போகும்
நிலங்கிழித்து
மாரியில்...
முகம் காட்டும்
ஓயனெனப்
பெருவெளியெங்கும்
படையெடுக்கும்
பயிரோடும்
போர் தொடுக்கும்
மண் காக்கும்
விழும்போதும்
உரம் சேர்க்கும்
பாதம் சுமக்கும்
மழை கழுவிப் போனபின்
புனிதம் காணும்
பசும் புற்கள்...
பனிமுடி தரிக்கும்
எம்மேனி சிலிர்க்க
கம்பளம் விரிக்கும்

கவிஞர். சு.க.சிந்துதாசன்

### யாரிடம் சொல்லியடி

கருவிலுள்ள பிள்ளைக்குத்
தெரியாது பூமியில்
நாம்படும் வேதனை
தெருவில் திரியும்
நாய்களுக்குத் தெரியாது
வாகனங்கள் தரும் சோதனை
வாகனத்தில் வரும்
எங்களுக்குத் தெரியாது
சாரதிகள் செய்யும் சாதனை
சாதனைகளால் எங்களுக்கு
ஒவ்வொருநாளும் வேதனை
வேதனைகளைத் தீர்க்க
ஒவ்வொருநாளும்
பொலிஸார் சோதனை
சோதனைகளையும் தாண்டி
மண்ணில் நமக்கு
மரணபோதனை

து.ஆதவன்
சிறுப்பிட்டி மேற்கு

### என் முடிவு

உயிர் விறைக்கும்
குளிர்ப்பொழுதுகளிலும்
ஊர் இறக்கும்
அர்த்த யாமங்களிலும்
இதயம் வலிகளை
வார்த்தைகளாக்குகின்றது
நினைவு நாட்காட்டியில்
நீ கிழிக்கப்பட்ட பக்கங்களானாய்
கனவுகளை கொலை செய்ய
கடவுளிடம் கட்டளையிட்டேன்
உன் நினைவுகள்
ஊரும் பாதையெங்கும்
ஊரடங்கு உத்தரவிட வேண்டும்
ஒரு கட்டளையிடு
கணப்பொழுதில்
மரணித்துக்கொள்கிறேன்
நீர் கண்ணீர்கூட
விடவேண்டாம்

சதீபன்
மயிலங்காடு

### அவரவர் பார்வையில்

தற்கொலை
ஆலோசனையின்றி
அவசரப்பட்டதன் முடிவு
முடிவு காண
முயல முடியாமையால்
மூச்சுத் திணற
மூச்சுவிட முயற்சி
தீர்வுகாண
திறனின்மையால்
தீர்க்கமான
தியாகம்

புத்தகம்
கரை காணாது கலங்குவோருக்கு
கலங்கரை விளக்கு
தகைசான்றோரால் தரப்படும்
தகவல் தாங்கி
திக்கு திசை தெரியாது
திணறுவோருக்கு
திருப்புமுனை

முகம்
உள்ளத்தின் நவரச
உள்ளக்கிடக்கையை
பிரதிபலிக்கும்
கண்ணாடி

நா.சசிகலா

### ஆத்மாவின் குரல்

கார்த்திகை நாளினில் ஓர் நாள்
எந்தன் கனவினில்
சாவிற்கு அஞ்சாது சரித்திரம்
படைத்திட்ட ஆத்மாக்கள்
கண்ணீரோடு கலங்கியே நின்றன!
காரணம் யாதென
வினவிய போது...
நம் தமிழன்னையின்
கலாசாரமதனை கயவர்கள்- இங்கே
சிதைத்திடும் போது
கதறிட மட்டுமே- எங்களால் முடியும்
துயில் கலைந்து நாம் ஓர் நாள்
மீண்டும் எழுவோம்
எம் தமிழன்னையின் கறையினைப்
போக்கிட... என்றே
கூறி மறைந்தன...
நிழல்கள் இங்கே நிஜங்களாகுமா?
விடிவு எமக்கு மீண்டும் வருமா?

கி.சரண்யா

### இமயம் தொட...



நம்பிக்கைத் துளிகளை
உன்னுள் வித்திடு
உளியாய்இரு
சிலை செய்யும் போது
மொழியாய் இரு
உச்சரிப்பின் போது
நூலாய் இரு
ஆடை நெய்யும்போது
எப்போதுமே நீயாய் இரு
நியாயத்தைத் தட்டிக்கேட்டு

மாவை நா.கஜேந்திரன்

### நலம் சுமந்து வா

புதிய சகாப்தம் மண்ணில்
புலர்ந்து வரட்டும்
புத்தாண்டாய் அது பூமியில்
பவனி வரட்டும்
இத் தரை சிறக்கட்டும்
இங்கிதம் நிலைக்கட்டும்
இழந்தவை கழிந்து போகட்டும்
இருப்பவை இங்கே நிலைக்கட்டும்
மங்கலம் தங்க
மனைகள் மாண்புறட்டும்
மாவிலைத் தோரணம்
வாயிலிலே அசைந்தாடட்டும்
வசந்தம் கூடி வலம் வரட்டும்
வந்த புத்தாண்டு புதுமைகள் சூழ
நலம் பெறட்டும்

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்



## மௌனத்தின் தேடல் – 102

### தமிழின் வேண்டுதல்

ஆசான் போல
சித்திரம்
முடியும் ஆண்டு
காலடியில்
படியாய் வைப்போம்
பதினொன்று
கொடியாய் வைப்போம்
பன்னிரெண்டு
விடியும் ஆண்டாய்
வருவாயோ?

சு.அபர்ணா
வட்டுக்கோட்டை

### அழித்துவிடு

அர்த்தமற்ற ஆண்டாக பதினொன்றே
சென்றுவிட்டாய்- அடுத்து வரும்
பன்னிரெண்டே அழைக்கின்றோம்
உன்னை இங்கு அளித்துவிடு
எங்களுக்கு அர்த்தமுள்ள
தீர்வு தன்னை

திருமதி சந்திரன்தேவி
மானிப்பாய்

### இன்னுமொரு புத்தாண்டு

பிறந்தது புதுப்புத்தாண்டு
மலருமா எம் வாழ்வில் வசந்தம்
இல்லை தொடருமா???
எம் வாழ்வின் துன்பவியல்
என்று மாறிவிடும் எம் நிலை
ஏங்குகிறது விழிகள்
இன்னுமொரு
புத்தாண்டுக்காய்

சுமலா இளங்கோவன்
குருநகர்

### 2012

காலத்திற்கு மறுபடியும்
ஓர் பிறந்தநாள்
கலண்டருக்கு மறுபடியும்
ஓர் இறந்தநாள்
இன்னொரு கலண்டர்
வாங்கி வைத்தாலும்
இறந்தகாலம் வரப்போவதில்லை

சிவாஷரி
மல்லாகம்

### நம்பலாமா?

இரண்டாயிரத்துப் பதினொன்று
இருள் சூழ்ந்த துன்ப ஆண்டு
அடிப்படை உரிமைகளைப் பெற்றுச்
சுதந்திரமாக வாழ எண்ணி ஏமாந்தோம்
அடுத்த ஆண்டு அமைதி பிறக்குமெனத்
தொட்டுக்காட்டுவதை நம்பலாமா?

துரை
தென்மட்டுவில்.

### முடிவு என்னவோ?

பதினொன்று போகிறது
பன்னிரெண்டு வருகிறது
பதின்மூன்று வருமுன்னே- நாங்கள்
பட்டதுயர் தீர்ந்திடுமோ?
நிம்மதியடைவோமா?
நிரக்கதியடைவோமா?
முகவரி எழுதியவரே
முடிவுரையையும் நீர் எழுதும்

நந்தன் யசோ

### புது தீர்வே மலர்க!

புத்தாண்டு பல மலர்ந்து உதிர்ந்தன
அத்தனையும் எம்மவர்க்கு உய்வில்லை
எத்தனை வந்து போயினும்
போனது போகட்டும்- வரும்
புத்தாண்டே புது தீர்வை
நிரந்தரமாய் கொண்டுவா!

பொ.புனிதன்
வரியப்புலம்

### போய் வா!

சென்று வா பதினொன்றே!
வெற்றியோடு வந்து வீறுகொள்
இரண்டாயிரத்து பன்னிரெண்டே!

அ.அன்பு
வடவரணி

### வருக

இரண்டாயிரத்து பன்னிரெண்டே
இன்முகத்துடன் வருக
இன்னல்கள் அகன்று
இன்பங்கள் ஓங்க
இந்தாண்டாவது
இரக்கங்காட்டுங்கள் இறைவா

ஞா.பொன்ராசா

### தீபமேற்றுவாயா...?

பொம்மை போலுள்ள
தமிழர் வாழ்வில்
புதுவருடமே – நீயாவது
நிரந்தர தீர்வு தந்து
தீபமேற்றுவாயா...?

ந.வினோரூபன்
யா/நெல்லியடி ம.ம.வி

### வரவேற்பு

ஈழத் தமிழர்கள் இதுவரை
எதிர்நோக்கி வந்த
இன்னல்கள் எல்லாம்
விலகி வாழ்வில்
இன்பங்கள் பெருகிடவே
வரும் புத்தாண்டைக்
குதூகலமாய் வரவேற்போம்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

### அவதாரம்

துன்பங்கள் தொலைந்துபோய்
இன்பங்கள் நிலைப்பதற்காய்
நம்மவரின் உயர்ச்சிக்கென
அவதரிக்கும் புதுவருடம்!

வ.வாமணன்
அல்வொள்ளையூர்

### நல்வழி காட்டாயா...

பூத்துக் குலுங்கும் புதுவருடம்
புதிய சேதியை சொல்லுமா...
பதியும் நினைவோடு மனதில்
புதிய சிந்தனையை வரையுமா...
இல்லை... சேற்றில் அமிழ்ந்து
மூச்சுமுட்டி அவதிப்படும்
மனநிலைதான் தொடருமா...?

ம.ச.செல்வராசா
திருநாவலூர்

### நன்றே மலர்ந்திடுமா?

பத்துடன் ஒன்று பறந்து போனது
பன்னிரெண்டு படலையில் நிற்குது
காலடிவைத்த நம் கருமங்களாகுமா?
போரிடி விளைவுகள் வடுக்கள் நீங்குமா?
கற்ற பாடங்கள் காட்சிக்குப் படைத்து
மற்ற நாடுகளை சாட்சிக்கு அழைத்து
ஏய்! மாற்றம் வருமா? ஏமாற்றம் தொடருமா?
நாமாற வழிவகைகள் நன்றே மலர்ந்திடுமா?

தென்புலோலியூர்
த.பாலகிட்ணபிள்ளை

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 103

**அன்பு வாசகர்களே !**



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 06.01.2012 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# கருணைக்கு பேதமில்லை



ஆன்மீகம் 09

இது ஆண்,இது பெண் என்று நாம் பிரித்ததே பெரிய தவறு. மனிதரென்று பார்க்காமல்,ஒவ்வொரு கணத்திலும் பிரித்துப் பார்க்க எந்தத் தேவையுமில்லை. வீட்டிற்குள்ளும், தெருவிலும்,எங்கே சென்றாலும் பிரிவு என்பது. இருக்கிறது. ஆண், பெண் என்று பிரித்துப் பார்பதற்கான தேவை எல்லா நேரங்களிலும், ஆண்களை ஒரு நிலையிலும்,பெண்கள் ஒரு நிலையிலும்



எய்ட்ஸ் நோயினால் பாதிப்புற்றவர்

வளர்ந்திருக்கிறோம். எல்லாவற்றிலும் இவர்கள் இருவரும் தனித்தனி இனம் என்பது போல மனதில் உறுதிப்படுத்திவிட்டோம். இது உங்கள் வீட்டிற்குள் இருக்கும் பிரச்சனையை,வேறு யார் வந்து களைவது? வீட்டிற்குள் இருக்கும் பிரச்சனையை,அரசாங்கமோ,அரசு சாராத நிறுவனங்களோ,அல்லது நானே களைய முடியாது.

குழந்தைகள் வளர்ப்போரின் மனநிலை மாற வேண்டும்.அந்த மனநிலை மாறுவது,ஒரு நாளில் நடக்கூடிய காரியமில்லை. சில வீடுகளில் பெண்களை எரிக்கிறார்களே,அது போன்ற சூழ்நிலைகளில், பாதிக்கப்படும் பெண்களை வெளியில் கொண்டு வர பலரின் உறுதுணை இருக்கும். ஆனால் பொதுவாக மற்றவர்களின் வீட்டிலுள்ள சூழ்நிலையை மாற்றுவதற்கு, ஒவ்வொரு வீட்டிலும் சென்று பேசி சரிப்படுத்துவதற்கான வாய்ப்பு நிச்சயமாக இல்லை. உங்களுடைய கணவர் தான் அந்தப்பொறுப்பை எடுக்க வேண்டும். அவருக்கும் நோயிருக்கிறது,உங்களுக்கும் இருக்கிறது. எனக்கிருக்கும் பிரச்சனை தானே அவர்களுக்கும் இருக்கிறது. என்னால் தானே அவளும் வந்தது என்பதை உணர்ந்து அவர் பொறுப்பெடுக்காவிட்டால்,குடும்பச் சூழ்நிலையை வேறுயாராலும் மாற்ற முடியாது.

கேள்வி- எனக்கு திருமணம் முடிந்து,குழந்தை பிறந்து 5மாதங்களில் என் கணவருக்கு எச்.ஐ.வி இருப்பது தெரியவந்தது. அதனால் ஏற்பட்ட தற்கொலை எண்ணத்தை, குழந்தையின் அழுகுரல் கேட்டுத்தான் மாற்றிக் கொண்டோம். அதன் பின்பு ஆறு மாதங்களுக்குள் என் கணவர் இறந்து விட்டார். இந்த சமுதாயத்தில்,என்னை எந்தவொரு நல்ல காரியத்திலும் முன் நிறுத்தவில்லை. இது போன்ற சூழ்நிலை அனேக பெண்களுக்கு இருக்கிறது. இதற்கு நீங்கள் என்ன சொல்ல விரும்பகிறீர்கள்?

சத்குரு-இது சாதாரண சூழ்நிலையென நாம் கருதவில்லை. நோயால் பாதிக்கப்படும் போது, பெற்றவர்களால் அதைத் தாங்கிக்கொள்வதென்பது முடியாத ஒன்றாகும். குழந்தைக்கு இந்த பாதிப்பு வந்ததை எவராலும் தாங்கிக் கொள்வதென்பது முடியாத ஒன்றாகும். குழந்தைக்கு இந்த பாதிப்பு வந்ததை எவராலும் ஜீரணித்துக் கொள்ள முடியாது. ஆனால்,மிக முக்கியமானது என்னவென்றால் தற்போது இப்படி நிகழ்ந்து விட்டது. இந்த சூழ்நிலையில் மனிதனால் செய்ய முடிகிற ஒரே ஒரு காரியம்,இப்போதுள்ள சூழ்நிலைக்கு நிம்மால் என்ன செய்ய முடியும் என்று பார்ப்பது மட்டுமே. ஏன் இப்படியெல்லாம் நிகழ்ந்து விட்டது. என்று பார்க்காமல் எந்தப் பிரயோசனமும் இல்லை.

இந்த நோயினால் பாதிக்கப்பட்ட பல இலட்சக்கணக்கான மக்கள் பல்வேறு சமூக சூழ்நிலைகளிலிருந்தும் வந்திருந்தாலும்,ஏதோவொரு வகையில் அவர்களுடைய உள் சூழ்நிலை ஒரே விதமாகத் தான் இருக்கிறது. இவர்களுக்கு சமூகத்தில் ஒரு வ்கையான தனிப்பட்ட தீங்கு நடந்திருக்கிறது. எப்போதெல்லாம் தீங்கு நேர்கிறதோ,அது எச்.ஐ.வி மூலமாகவோ,விபத்து மூலமாகவோ,வே'று நோய்கள் மூலமாகவோ அல்லது பெரும் துன்பங்கள் மூலமாகவோ எந்த விதமாக இருந்தாலும், அது எதனால் நிகழ்ந்தது என்பது முக்கியமல்ல. எப்போதெல்லாம்,ஒரு மனிதன் அவனது வாழ்வில் துன்பத்தைச் சந்திக்க நேரிடுகிறதோ, அப்போது அவன் சில சவால்களையும், மிரட்டல்களையும் எதிர்கொள்ள நேரிடுகிறது. என்னவென்றால், தன்னிடம் புத்துணர்வையும் தைரியத்தையும் வரவழைத்துக் கொண்டு,அது போன்ற சூழ்நிலைகளை எதிர்கொள்ளத் தேவையான திறமைகளை வளர்த்துக் கொள்வதுதான்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# கனடாவில் முக்கியமாக மொன்றியல் மாநகரத்தில் ஈழத்தமிழரின் வாழ்வும் வகைகளும்... 04

இலங்கைக்கு வெளியே ஈழத்தமிழர் அதிகமாக வாழும் தேசமாகிய கனடாவில் -மொன்றியலில் - அவர்களது வாழ்வின் விபரங்கள் பற்றிய சிறு ஆய்வு

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

தனிமனிதத்துவம் என்ற உரமான விசயம் ஒன்று இருக்கிறது. மனிதர் ஏதோஒரு வகையில் எல்லோருமே சுயநலவாதிகள்தான். இதன் காரணமாக பொறாமை, வன்மம், ஒற்றுமையின்மை என்பன பிறக்கின்றன.உலகில் உள்ள சகல இனத்தவர்களிடமும் இந்தப் பிரச் சினை உண்டு.

மொன்றிலில் ஆரம்பிக்கப்பட்ட கலை, இலபக்கியம், கல்வி, விளையாட்டு அமைப்புக்களினிடையே பூசல்கள் ஏற்படுவதும் வழமை தான் இது மனடா பூராவும் ஈழத்தமிழரிடையே நடைபெறுகின்ற ஒன்று. அமைப்புக்களில் ஈடுபடுவோர் கருத்து வேறுபாடுகளின் பின்னர் பிரிந்து, ஒரு விடயத்தில் ஈடுபடுகின்ற பிற அமைப்புக்களையும் தொடங்குவதும் சாதாரண விடயம்.

விளையாட்டுக் கழகங்கள், வானொலி, பத்திரிகை, நிறுவனங்கள், கல்விநிலையங்கள்- ஏன் ஆலயங்கள் கூட புதிதாக பெருக்கெடுப்பதும் வழமை. உதாரணத்திற்கு கனடாவில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட வாராந்த பத்திரிகைகள் வெளியடப்படுகின்றன. பல தொடர முடியாமல் மறைந்து போனாலும் அடிக்கடி புதியவை முளைக்கின்றன. தமிழ் மக்கள் தொகை விகிதாசாரத்திற்கு முரணாக இவற்றின் எண்ணிக்கை இருப்பதால் பலர் இவற்றில் பலவற்றினை கணக்கெடுப்பதில்லை ஈழ அரசியல் போராட்ட அமைப்பின் முகவர்களாக கனடாவில் செயற்படுபவர்களின் தீவிர நடவடிக்கைகளையும் அங்கு காணமுடியும். இலங்கையின் உள் நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தாலும் இத்தீவிரம் பெரியளவில் குறையவில்லை.

எது எப்படியாயினும் மூன்றரை இலட்சம் வரையிலான ஈழத்தமிழர் ஒப்பீட்டளவில் மிகவும் வசதியாக வாழும் கனடா, ஈழத்தமிழ் தேசிய இனம் என்கிற வகையில் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்ற உண்மை கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியது.

இன்னும் ஒரு இருபத்தைந்து முப்பது ஆண்டுகளின் பின்னர் ஈழத்தமிழரின் செயற்பாடுகள், ஒழுங்கமைப்புக்கள் பற்றி இப்போது நிச்சியமாக எதுவும் கூற முடியாது உள்ளது.இலங்கை, இந்தியா மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா போன்றன நாடுகளில் வாழுகின்ற ஈழத்தமிழர், புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்-தமிழம் என்கிற எண்ணக் கருவை வருங்காலத்தில் தொடர்ந்தும் முன்னெடுப்பவர்கள் என்று நம்புகிறார்கள். இது நிச்சியமாக கேள்விக்குரியது. வருங்கால சந்ததியினர் உதாரணத்திற்கு புலம் பெயர்ந்த நாடுகளில் பிறந்த ஒரு பத்து வயதுப் பிள்ளையின், பத்து வயது பேரப்பிள்ளை- அண்டு கிட்டத்தட்ட 2060- நிச்சியமாக வாழும் நாட்டின் கலாச்சாரத்தால் உள்வாங்கப்ட்டு தமிழினை மறந்துவிடும் போலத் தெரிகிறது. ஈழத்தமிழர் என்ற நினைப்பிலிருந்து விடுபடுவார்கள் போலத்தான் தெரிகிறது. இது மிகவும் கவலைக்குரிய உண்மை எப்படியாயினும் இப்போது நிலைமை அவ்வளவு மோசமாயில்லை.

ஈற்றில் கனடாவில் இன்றைய ஈழத்தமிழர் பரந்துபட்டு வழர்ச்சியுற்று இருப்பதற்கு அடிப்படை ஆதார நகராகவிருந்த மொன்றியல் நன்றிக்குரியது என்பது முக்கியமாக சொல்லப்பட வேண்டியது.

நதிமூலம் போல இந்த ஈழத் தமிழரின் சிறப்பிற்கான நகர மூலத்தையும் மறக்கக் கூடாது.

அன்று மோகனமுட்டும் மொன்றியல் மாநகரத்திற்கு செயின்ற் லோறென் நதிக்கரையில் தவழ்ந்த தமிலோசை இன்று அன்டீஸ் றொக்கீஸ் வரை சென்று நடைபயில்கின்றது. இந்த வகையில் தேன்மது ரத் தமிலோசை உலகெலாம் பரவ வழிசெய்திட, ஈழத்தமிழினமும் தன்னால் இயன்ற காத்திரமான பணியையும்


எஸ்.பி.கனகசபாபதி
(கல்கிதாசன்)

பங்களிப்பையும் செய்துள்ளதை யாரும் என்றும் மறக்க முடியாது.

நித்தமும் உழைப்போம்!
முத்தமிழ் காப்போம்!!

(முற்றும்)

# வடக்குக்கிழக்கு தமிழரின் பிரதிநிதித்துவத்தை முதலில் நிலைநாட்டிய வரலாற்று நாயகன்



**ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராசா மகேஸ்வரனின் 4 ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது**

கடந்த பல தசாப்தங்களாக இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் ஏற்படுத்திய ஆழமான வடுக்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் மனங்களில் என்றுமே மாறாதவையாகும். இலங்கையின் அரசியல் வளர்ச்சியில் யுத்தம் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதைக் காணமுடிகின்றது. இலங்கைத் தமிழரின் பிரதிநிதிகளாக அவர்களின் பிரச்சினைகளை பாராளுமன்றம் வரை சேர்ப்பித்த பலரை இன்று எம்மிடையே காணமுடியவில்லை.

தற்போது தீர்வு காணவேண்டிய வேளையில் தமிழ்த்தலைவர்கள் பலரை நாம் இழந்து நிற்கின்றோம். அந்தவகையில் அமரர் தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொண்டுவருவதிலும் தீர்ப்பதிலும் காத்திரமான பங்களிப்பை நல்கி சிறந்ததொரு அரசியல்வாதியாக, சமூக தொண்டனாக, சிவ பக்தனாக விளங்கி, மறைந்தும் மக்களின் மனங்களில் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

ஒரு துணிவு மிக்க அரசியல்வாதியாக, மனதில் சரி என்று கருதுவதை துணிவுடன் எடுத்துக் கூற வல்லவராக, தூய்மையான செயற்பாடு மிக்க செயல் வீரனாக விளங்கினார்.

1966 ஆம் ஆண்டு தை மாதம் 10 ஆம் திகதி பிறந்த அமரர் தியாகராசா மகேஸ்வரன் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, யாழ்ப்பாணம் புனித பரியோவான் கல்லூரி என்பவற்றில் கல்வி பயின்றிருந்தார். ஆரம்பத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டதுடன் பிரபல்யமான இளைஞராக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி மூலமாக அரசியலில் பிரவேசித்து யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு 44 வருடங்களின் பின்னர் தேசிய கட்சி ஒன்றில் வெற்றியீட்டிய முதல் நபர் ஆவார்.

2004 ஆம் ஆண்டு யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் இருந்து நீங்கி கொழும்பிலே ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய பிரதிநிதிகளிலே விருப்பு வாக்குகளின் அடிப்படையில் நான்காவது இடத்தைப் பெற்றவராக மகத்தான வெற்றியை நிகழ்த்திக் காட்டினார்.

மேல்மாகாணத்தின் தலைநகரான கொழும்பிலே முதல் முறையாக தமிழரின் பிரதிநிதித்துவத்தை நிலை நாட்டிய வடக்கு கிழக்கை பிறப்பிடமாகக் கொண்ட முதலாவது தமிழர் என்ற பெருமை மகேஸ்வரன் அவர்களையே சாரும். இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் தமிழ் பேசும் மக்களின் சார்பிலே ஒரு தமிழர் கூட வெற்றியீட்டியிருக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்புத் தெரிவிக்காத சந்தாப்பங்களிலும் அவர் அச்சமின்றி அரசாங்கத்தின் அவசர கால சட்டத்திற்கு எதிராக வாக்களித்தார். கடந்த காலங்களிலே கொழும்பு வாழ் தமிழர்கள் கைது செய்யப்பட்ட போதெல்லாம் அதற்கு எதிராக முதலில் ஒலித்தகுரல் மகேஸ்வரனின் குரலாகத்தான் இருந்தது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்து கொழும்புக்கு வருகின்ற தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை தட்டிக் கேட்பதற்கும் குறிப்பாக அவர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களில் அடைக்கப்பட்ட நேரத்தில் அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளில் முன்னின்று செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினராக திகழ்ந்தார். தலைநகர் கொழும்பில் 3 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்ட போது அதனைப் பாராளுமன்றத்தில் மிகத் தெட்டத் தெளிவாக உணர்ச்சியோடு மூன்று மொழிகளிலும் ஆக்ரோசமாக தெரிவித்த பெருமை மகேஸ்வரன் அவர்களையே சாரும். இதற்காக பாராளுமன்றத்தில் தனது மேலாடையைக் கழற்றியெறிந்து எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

மகேஸ்வரன் இந்துகலாசார அமைச்சராக இருந்த போதும் இந்து மதம் மலர்ச்சி அடைந்த காலமாக காணப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் இந்து மதத் தலங்களான சந்நதி முருகன், வல்லிபுர ஆழ்வார் கோவில், காரைநகர் சிவன் கோவில் என்பவற்றையும் மற்றும் பல கோயில்களையும் அபிவிருத்தி செய்திருந்தார். 2003 ஆம் ஆண்டிலே அவரால் நடத்தப்பட்ட உலக இந்து மகாநாடு, தேசிய தீபாவளி திருநாள் அவருக்கு மாபெரும் புகழைத் தேடித்தந்தது. அறிஞர்களின் ஒன்றுகூடல், கலைநிகழ்வுகள், பல்வேறு விவாதங்கள் போன்றன இவர் காலத்தில் கொழும்பையும் யாழ்ப்பாணத்தையும் அலங்கரித்தன.

2006 ஆம் ஆண்டு ஏ 9 வீதி மூடப்பட்ட வேளையில் குடாநாட்டு மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்ல கப்பல்களை தர எவரும் முன்வரவில்லை. அப்போது அவருக்கிருந்த அச்சுறுத்தல்கள் மத்தியில் குடாநாட்டு மக்களுக்காக தன் கப்பல்களை வழங்கியிருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினராக தமது மக்களின் உயர்வுக்காகவும் அகில இலங்கை மக்களின் உணர்வுக்காகவும் ஜெனீவாவில் இடம்பெற்ற அனைத்து உலக பாராளுமன்றக் கூட்டத்திலும் இலங்கையின் சார்பாக கலந்து கொண்டார்.

2008.01.01 புதுவருடத்தினத்தன்று பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலுக்கு சென்றிருந்த சந்தர்ப்பத்தில் எவரும் எதிர்பார்க்காமல் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்தார்.

முழு நாடும் அறிந்திருந்த மிகப் பிரபலமான ஓர் அரசியல்வாதியாக மிளிர்ந்த மாண்புமிகு மகேஸ்வரன் அவர்கள் மிகக் குறுகிய காலத்துக்குள்ளே அரசியல் வானிலே மின்னுகின்ற ஒரு கவர்ச்சிகரமான தாரகையாக மாறியிருந்தார்.

மகேஸ்வரன் அவர்கள் மறைந்த பொழுதும் அவரது அரசியல், சமய, சமூக பணிகள் இன்றும் அவரது பாரியாரால் தொடரப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இலங்கையின் அரசியல், சமய, சமூக வரலாற்றில் என்றுமே நிலைத் திருக்கக்கூடியளவில் அவரது பணிகள் காணப்படுவதுடன் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் மனங்களில் நீங்கா இடம் பிடித்துள்ளார். ✷

அன்பரசி அருள்ச்செல்வன்
வலயக்கல்வி அலுவலகம்,
தென்மராட்சி

# சகல சிவில் உரிமைகளுடனும் பொன்சேகாவை விடுதலை செய்க

## ஐ.தே.க.உறுப்பினர் கோரிக்கை

(கொழும்பு)

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிவில் உரிமைகளுடன் விடுதலை செய்யப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெலிக்கடைச்சிறைச்சாலையில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் சரத் பொன்சேகாவை சஜித் பிரேமதாச மற்றும் கரு ஜயசூரிய ஆகியோர் நேற்று முன்தினம் பார்வையிட்டுள்ளனர்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் நோக்கில் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் கிளர்ச்சிக்குழுவினர் பூரண ஆதரவை வழங்குவதாக கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரஜை என்ற ரீதியில் அனுபவிக்க கூடிய சகல சிவில் உரிமைகளுடனும் சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

இவ்வாறு சிவில் உரிமைகள் முடக்கப்படாது விடுதலை செய்யப்பட்டால் சரத் பொன்சேகா செயற்பாட்டு அரசியலில் ஈடுபட வாய்ப்பு ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# தகுதியில்லாத சுற்றுலா விடுதிகள் தற்காலிகமாக மூடப்படும்

## அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா

(கொழும்பு)

உரிய தகுதிகளை கொண்டிராத சுற்றுலா விடுதிகளை தற்காலிகமாக மூடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தங்காலை பிரதேசத்தில் இயங்கி வரும் தகுதியற்ற விடுதிகள் தற்காலிகமாக மூடப்படவுள்ளதுடன் தங்காலை கரையோரப் பகுதிகளில் காணப்படும் சுற்றுலா விடுதிகள் கண்காணிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபை, கலால் திணைக்களம், கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியன கூட்டாக இணைந்து இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# காலியில் விபத்து

(கொழும்பு)

காலி உடுகம பகுதியில் இரண்டு முச்சக்கர வண்டிகள் ஒன்றோடொன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினமிரவு 10.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன் விபத்தில் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

(அ-2)

## யாழ்.மாணவன் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றதையிட்டு பெருமை அடைகிறேன்

# கல்வியமைச்சர் பந்துல புகழாரம்

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த மாணவரொருவர் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் தேசிய ரீதியில் முதலாம் இடத்துக்கு வந்தமை குறித்து கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன பெருமையடைவதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் குறித்த மாணவரைச் சந்திக்கவும் எதிர்பார்க்கின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் கடந்த 30 வருட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்டத்தில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் முயற்சியும் ஆர்வமும் இருந்தால் சாதிக்க முடியும் என்பதற்கு மாணவர் கமலவாசன் முன்மாதிரியாகத் திகழ்கிறார் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் 100 வீதம் சரியான முறையில் வெளியிடப்பட்டுள்ளன. இந்நிலையில் பரீட்சைப் பெறுபேறுகளை இரத்துச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதனை தெளிவாகக் கூறலாம் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போதைய நிலைமையில் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டு மாணவர்களின் எதிர்காலமும் தீர்மானிக்கப்பட்டு விட்டது. இந்நிலையில் பரீட்சை முடிவுகைள இரத்துச் செய்வதானது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# காணி, பொலிஸ் தொடர்பான ஐ.தே.கவின் கோரிக்கையை நிராகரித்தது அரசாங்கம்

(கொழும்பு)

மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். இல்லையேல் 13 ஆவது திருத்தச்சட்டம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவின் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அரசாங்க பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இது தொடர்பில் கருத்துரைக்கையில், ஐக்கிய தேசியக்கட்சியின் காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குகாணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கவிருந்த நிலையில் ஜயலத்தின் இந்த நகைப்புமிக்க கருத்தை பெரிதாக எடுக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

13 ஆவது அரசிலமைப்பு திருத்தத்தின் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான முக்கிய அம்சங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் ஆராயும்.

அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு அந்த விடயத்தை ஆராயும். இந்த நிலையில் குறித்த நாடாளுமன்றக்குழுவுக்கு தமது உறுப்பினர்களின் பெயர்களை பரிந்துரை செய்ய ஐக்கிய தேசீயக்கட்சியும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் முன்வரவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பேருந்து தரிப்பிடம் அமைக்க பொதுமக்கள் கோரிக்கை

பரந்தன் சந்தியில் பஸ்தரிப்பு நிலையம் [illegible]றி பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்ற னர்.

அங்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த பஸ்தரிப்பு நிலையம் யுத்த காலத்தில் இருந்து சேதமடைந்து காணப்படுவதால் இதனை புனரமைத்து கொடுப்பதற்கு எவரும் முன்வராமையால் பயணிகள் மாரி மற்றும் கோடை காலங்களில் மரங்களுக்கு கீழும் அருகில் உள்ள கடைகளிலும் தரித்து நின்றே பயணிக்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் அங்கு ஒரு பஸ் தரிப்பு நிலையத்தை அமைத்து தர வேண்டுமென மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-10)

# அரசு சகல விடயங்களிலும் குழப்பத்தை ஏற்படுத்துகிறது

## ஜே.வி.பி.தெரிவிப்பு

தற்போதைய அரசாங்கம் சகல விடயங்களிலும் குழப்பங்களை ஏற்படுத்தி வருவதாக ஜே.வி.பி.கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

மோசடிகளின் மூலம் தேர்தல்களில் வெற்றியடைந்த போதிலும் மக்கள் அரசாங்கத்தை விட்டு விலகிச் சென்றுள்ளனர் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் நாளுக்கு நாள் இந்த நாடு பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, கிளர்ச்சியாளர்கள் ஜே.வி.பியிலிருந்து நீக்கப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாந்தோட்டை தெபரவெல மைதானத்தில் இன்றைய தினம் ஜே.வி.பியின் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மத்திய செயற்குழுவில் அங்கம் வகித்து வரும் ஒன்பது கிளர்ச்சிக்குழு உறுப்பினர்களும் தங்களது உறுப்புரிமையை இழக்க நேரிடும் என தெரிவிக்கப்படுகின்றது.

பொதுச் சபைக் கூட்டத்தை தடுத்து நிறுத்த கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்துள்ளது என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

முடியுமென்றால் கிளர்ச்சியாளர்கள் தங்களது பலத்தை பொதுச் சபைக் கூட்டத்தில் காட்டப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என கிளர்ச்சிக்குழு உறுப்பினர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார். (அ-2)

# 2012.01 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ கி.மு.45-ஜூலியன் நாட்காட்டி அறிமுகப் படுத்தப்பட்டது.

★ 1502-போர்த்துக்கீச நாடுகாண் பயணி பெட்ரோ ஆல்வாரெஸ் கப்ரால் பிரேசில் நாட்டின் ரியோ டி ஜனெய்ரோ நகரை அடைந்தான்.

★ 1600-ஸ்கொட்லாந்து ஜூலியன் நாட்காட்டியை பயன்படுத்த ஆரம்பித்தது.

★ 1700-ரஷ்யா ஜூலியன் நாட்காட்டியை பயன்படுத்த ஆரம்பித்தது.

★ 1752-கிரிகோரியன் நாட்காட்டியை பிரித்தானியா ஏற்றுக் கொண்டது.

★ 1772-90 ஐரோப்பிய நாடுகளில் பயன்படுத்தக் கூடியதான உலகின் முதலாவது பயணிகள் காசோலை லண்டனில் விற்பனைக்கு வந்தது.

★ 1801-பெரிய பிரித்தானியா மற்றும் அயர்லாந்துப் பேரரசு இணைந்து ஐக்கிய இராச்சியம் ஆனது.

★ 1806-பிரெஞ்சு குடியரசு நாள்காட்டி பாவனையிலிருந்து விலக்கப்பட்டது.

★ 1808-ஐக்கிய அமெரிக்காவில் அடிமைகளை இறக்குமதி செய்வது தடை செய்யப் பட்டது.

★ 1858-இலங்கையில் முதலாவது தந்திச் சேவை கொழும்புக்கும் காலிக்கும் இடையில் ஆரம்பமானது.

★ 1866-யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக பொலிஸார் (Police Force) அமைக் கப்பட்டது.

★ 1867-ஐக்கிய அமெரிக்காவில் ஒஹாயோவின் சின்சினாட்டி நகருக்கும் கென்டக்கியின் கொவிங்டன் நகருக்கும் இடையில் ஜோன் ஏ. ரோப்லிங் தொங்கு பாலம் திறக்கப்பட்டது. இதுவே உலகின் அதி நீளமான தொங்கு பாலமாகும்.

★ 1872-இலங்கையில் ரூபாய் மற்றும் சதம் ஆகிய நாணயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

★ 1872-முதலாவது இந்திய அஞ்சல் (தபால்) சேனி மலைச் (Mount Cenis) சுரங்கம் ஊடாக சென்றது.

★ 1877-இந்தியாவின் மகாராணியாக விக்டோரியா டில்லியில் அறிவிக்கப்பட்டார்.

★ 1883-இலங்கையின் தமிழர் தாயகம் வடக்கு, கிழக்கு என இரண்டு மாகாணங் களாகப் பிரிக்கப்பட்டது.

★ 1886-பர்மா விக்டோரியா மகாராணிக்கு அவரது பிறந்தநாள் பரிசாக வழங் கப்பட்டது.

★ 1890-எரித்திரியா, இத்தாலிய குடியேற்ற நாடாக ஆக்கப்பட்டது.

★ 1893-ஜப்பானில் கிரெகோரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1899-கியூபாவில் ஸ்பானிய ஆளுகை முடிவுற்றது.

★ 1901-பிரித்தானியக் குடியேற்ற நாடுகளான நியூசவுத் வேல்ஸ், குயின்ஸ்லாந்து, விக்டோரியா, தாஸ்மானியா, மேற்கு அவுஸ்திரேலியா ஆகியன அவுஸ் திரேலிய பொதுநலவாயம் என்ற ஒரே நாடாக இணைந்தன.

★ 1912-சீனக் குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1919-ஸ்கொட்லாந்தில் அயோலயர் என்ற கப்பல் (HMS lolaire) மூழ்கியதில் 205 பேர் உயிரிழந்தனர்.

★ 1926-துருக்கி கிரிகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.

★ 1927-துருக்கி கிரெகொரீயின் நாட்காட்டியை அறிமுகப்படுத்தியது.

★ 1935-இத்தாலியக் குடியேற்ற நாடுகளான திரிப்பொலி, சிரெனாய்க்கா ஆகியன சேர்ந்து லிபியா ஆகின.

★ 1945-பெல்ஜியத்தின் செனோன் நகரில் 30 ஜேர்மனிய போர்க்கைதிகள் ஐக்கிய அமெரிக்கப் படைகளினால் படு கொலை செய்யப்பட்டன.

★ 1947-இரண்டாம் உலகப் போரின் முடிவில் கைப்பற்றப்பட்ட ஜேர்மனியின் பிரித்தானிய மற்றும் ஐக்கிய அமெரிக்கப் பகுதிகள் ஒன்றாக் கப்பட்டன. இது பின்னர் ஜேர் மன் சமஷ்டிக் குடியரசு எனப் பெயர் பெற்றது.

★ 1949-ஐ.நா. அறிவுறுத்தலின் படி காஷ்மீரில் நள்ளிரவுக்கு ஒரு நிமிடத்துக்கு முன்னர் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி பாகிஸ்தானுடனான இந்தியப் போர் முடிவுக்கு வந்தது.

★ 1956-சூடான் நாடு எகிப்து மற்றும் பிரித்தானியா ஆகியவற்றிடம் இருந்து சுதந்திரம் பெற்றது.

★ 1958-இலங்கையில் வாகன இலக்கத் தகடுகளில் சிங்கள மொழியில் ஸ்ரீ எழுத்து கட்டாயமாக்கப்பட்டது.

★ 1958-ஐரோப்பிய சமூகம் அமைக்கப் பட்டது.

★ 1959-கியூபாவின் ஜனாதிபதி ஃபுல்ஜென் சியோ பட்டீஸ்டாஃபிடெல் காஸ்ட்ரோவின் படைகளினால் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 1978-ஏர் இந்தியா போயிங் 747 விமானம் வெடித்து மும்பையில் கடலில் வீழ்ந்து மூழ்கியதில் 213 பேர் உயிரிழந்தனர்.

★ 1993-செக்கோசிலவாக்கியா நாடு செக்குடியரசு சிலோவாக் குடியரசு என இரு நாடுகளாகப் பிளவடைந்தன.

★ 1995-உலக வணிக அமைப்பு உருவாக்கம்.

★ 1999-யூரோ நாணயம் அறிமுகமானது.

### பிறப்புக்கள்

★ 1943-செம்பியன் செல்வன், ஈழத்து எழுத்தாளர்


★ 1978-பரமஹம்ஸ் நித்யானந்தர், இந்திய ஆன்மீகவாதி

### இறப்பு

★ 1901-சி.வை.தாமோதரம்பிள்ளை, தமிழ்ப் பதிப்புத்துறையின் முன்னோடி (பி.1832)

### சிறப்பு நாள்

கியூபா (1899), ஹெயிட்டி (1804), சூடான் (1956), கமரூன் (1960), செக் குடியரசு (1993), சிலோவாக்கியா (1993), தாய்வான் (1912) ஆகிய நாடுகளின் சுதந்திர தினம்.



★ 2008- ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தியாகராஜா மகேஸ்வரனின் நினைவு தினம்.

# 2012 புத்தாண்டு பலன்கள் உங்களுக்கு எப்படி? 05



# சிம்மம்

**மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம்**

**ஏழரை விலகி இன்பம் வழங்கும்!**

**புகழ் பெற்றவர்களின் பட்டியலில் இடம் பிடிக்கும் பொன்னாக சிம்ம இராசி நேயர்களே!**

எடுத்த காரியத்தை முடிப்பதில் அசகாய சூரர்கள் நீங்கள். இனம்,மதம் பார்க்காமல் எல்லொருக்கும் உதவுவீர்கள். பாதிவாழ்க்கைக்கு மேல் உங்களுக்கு பக்க பலமாக இருப்பது தெய்வங்கள் தான் என்பதை அனுபவத்தில் தெரிந்து கொள்ளுவீர்கள். இப்படிப்பட்ட புத்தாண்டு உங்களுக்கு புதிய திருப்பங்களைத் தருமா? என்பதைப்பற்றி பார்ப்போம்.

வருடத் தொடக்கத்தில் 7 1/2 சனி விலகி இனிமைகளைச் சேர்க்கும் நேரம் இது. நாளும்,பொழுதும் நல்ல வாய்ப்புகள் உங்களுக்கு வந்து சேரும். குடும்பத்தில் அமைதி பெருகும். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். பொது நலத்தில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து கொண்டே இருக்கும். விலகிய சனியை ஒரு முறை ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வாருங்கள்.

**01.01.2012 முதல் 16.05.2012 வரை**

இக்காலத்தில் உங்களுக்கு புத-ஆதித்ய யோகமும், குரு மங்கல யோகமும் செயல்படும் நேரமாகும். தொட்டது துலங்கும்,வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும். உற்றார், உறவினர்கள் உங்களை விட்டு ஏன் விலகினோம் என்று வருத்தப்படுவர். கொட்டும் பணமழையில் நனையப் புதிய தொழில்கள் வாய்க்கும். கோலாகலமான வாழ்க்கைக்கும் அஸ்திவாரம் இடுவீர்கள். குருமங்கள யோகத்தால் குடும்பத்தில் சுபச்செலவுகள் ஏற்படும்.

குருவின் பார்வைப்பலம் உங்கள் இராசிக்கு 1,3,5 ஆகிய இடங்களில் • பதிவாகிறது. எனவே, ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். கார்,பைக் வாங்குவதற்காகக் காத்திருந்தவர்களுக்கு கடன் கிடைத்து வாகனம் வாங்கி மகிழ்வர். ஊர் மாற்ற சிந்தனைகள் மேலோங்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூட உன்னத நிலை உருவாகும். அண்ணன், தம்பிகளுக்குள் இருந்த சண்டை அகலும், ஆரோக்கியத்தில் இதுவரை இல்லாத சுறுசுறுப்பு இப்போது ஏற்படும். எண்ணிய எண்ணங்களை எல்லாம் செயற்படுத்த குருவின் 9-ம் பார்வையும் வழிவகுக்கிறது.

**17.05.2012 முதல் 31.12.2012 வரை**

இக்காலத்தில் எண்ணற்ற மாற்றங்களும், ஏற்றங்களும் வந்துசேரும் நேரம் இது. குறிப்பாக இராகு சுக ஸ்தானத்திலும்,கேது 10-லும் இருப்பதால் பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

விருதுகளும், வெற்றிவாகைகளும் சூடும் வாய்ப்பு கிடைக்கும். அதே நேரத்தில் சனி வக்ரம் பெறுகிறார்.

ஜூன் 23-ஆம் திகதி முதல் ஆகஷ்ட் 13 ஆம் திகதி வரை கன்னி இராசிக்குள் செவ்வாய், சனி சேர்க்கை ஏற்படுகிறது. கன்னிச் செவ்வாய்கடலும் வற்றும் என்பது பழமொழி எனவே எதிர்பாராத விரயங்கள் ஏராளமாக வந்து சேரலாம். வாங்கிய சொத்தை விற்க நேரிடும். சித்தப்பாவும் பெரியப்பாவும் சீற்றம் கொண்டு சண்டைக்கு வருவர்.

நீங்கள் செய்த புண்ணியம் குருவின் பார்வை சனி, செவ்வாய் மீது பதிவதால் ரிஷபத்தில் குரு சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் உங்கள் நிகழ்காலத் தேவை பூர்த்தியாகும். இன்பமும் துன்பமும் மாறிமாறி வந்து கொண்டே இருக்கும் வாழ்க்கையில் குருவை நீங்கள் முழுமையாக நம்பி வழிபட்டால் குதூகலங்களையே வரவழைத்துக் கொள்ள இயலும்.

அதன் அருள்பார்வை 2, 4, 6, ஆகிய இடங்களில் பதிவதால், உறவினர்களுக்குள் இருந்து பனிப்போர் விலகும். உதாசீனப்படுத்தியவர்கள் உங்களை விட்டு விலகுவர். தடைப்பட்ட திருமணங்கள் தடையின்றி நடைபெறும். தாய் வழித் தனலாபம் கிடைக்கும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

ஊரோரத்தில் ஒரு செய், என்பதற்கு இணங்க இடம் மனை வாங்கும் யோகம் கிடைக்கும். எதிரிகள் உதிரிகளாவர். இலாபம் சுயதொழிலில் பெருக்கெடுக்கும்.

வருடக் கடைசியில் வரும் இராகு-கேது பெயர்ச்சி எழிலான வாழ்க்கைக்கு அஸ்த்திவாரம் இடும். டிசம்பர் 2 ஆம் திகதி 3 ஆம் இராகுவும், 9ஆம் கேதுவும் சஞ்சரிக்கி றார்கள்.இந்த நேரம் தான் உங்கள் முன்னேற்றம் கருதி முடிவெடுக்க வேண்டிய நேரமாகும்.

**சாதனை நிகழ்த்த சமயேசித புத்தி தேவைப்படும் காலம்!**

சில கிரகங்கள் வக்ர காலத்தில் நன்மையைக் கொடுக்கும்.சில கிரகங்கள் வழிபட்டால் தான் வக்ர காலத்தில் நன்மையைக் கொடுக்கும்.மனிதர்கள் பலமிழந்த காலத்தில் மருத்துவமனைக்கும் செல்வது போல கிரகங்கள் பலமிழந்த காலத்தில் நாம் கோவில்களுக்குச் செல்ல வேண்டும்.

♦ செவ்வாயின் வக்கிர காலத்தில் குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

♦ புதனின் வக்ர காலத்தில் புறப்பட்டு வெளிநாடு சென்றவர்கள் போதிய வசதி இல்லையே என்று கவலைப்படுவீர்கள்.

♦ குருவின் வக்ர காலத்தில் வரவும் செலவும் சமமாகும்.

♦ சுக்கிரனின் வக்ர காலத்தில் சகோதர சச்சரவு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

♦ சனியின் வக்ர காலத்தில்

"ஜோதிடக் கலைமாமணி"
சிவல்புரி சிங்காரம்

பதவி வாய்ப்புக்கள் கிடைக்கும்.

**புத்தாண்டில் வளம் பெற முத்தான வழிபாடு!**

உங்கள் இராசிநாதன் சூரியன் என்பதால் ஞாயிற்றுக்கிழமை தோறும் சிவன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சிவனின் சந்நிதியில்

**கங்கையை முடியில் அணிந்திடும் சிவனே**
**என்குறை தீர்த்து இனிதே அருவாய்!**

என்று சொல்லுங்கள். குறை நீங்கி குதூகலம் கூடும்.

(தொடரும்)

# பொருளாதார வளர்ச்சியை கணிப்பதற்கு உள்நாட்டு உற்பத்தி மட்டும் பயன்படாது

## ஐரோப்பிய ஆய்வில் தகவல்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கணக்கிடுவதற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தி(GDP) என்ற அளவீட்டு முறை மட்டும் பயன்படாது என பிரிட்டனின் கேம்பிரிஜ்ட் பல்கலைக்கழகத்தின் புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பெலிசியா கூப்பெர்ட் தலைமையில் ஐரோப்பாவின் 23 நாடுகளில் பொருளாதார வளர்ச்சிக்கான அளவுகோல்கள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் 23 ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 43 ஆயிரம் பேரிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

மக்கள் தங்கள் வாழ்க்கையை நல்லவிதமாக அனுபவிக்கிறார்களா? என அரசுகள் புரிந்து கொள்ள வேண்டும். இதில் நல்ல அனுபவம் என்பதை அவர், நல்ல மன ஆராக்கியம் என்ற பொருளில் கூப்பெர்ட் கூறுகிறார்.

திறமை, உணர்ச்சிகளை உறுதியாகக் கையாளுதல், மன உறுதி, புரிதல், எதிர்மறையாகச் சிந்திக்காத தன்மை, நல்ல உணர்ச்சிகளை வெளிப்படுத்தல், நல்ல நட்புறவுகள், எதையும் தாங்கிக்கொள்ளுதல், தன்னம்பிக்கை மற்றும் உற்சாகம் ஆகிய 10 குணங்கள் மூலம் இந்த மனவளத்தை நாம் அறியமுடியும் என்கிறார் கூப்பெர்ட்.

இந்த ஆய்வின் அடிப்படையில் கூப்பெர்ட் கூறுகையில், மக்களின் வாழ்வைச் செழிப்பாக்க வேண்டும் என அரசியல்வாதிகள் விரும்பினால் இந்த குணகங்களின் அடிப்படையிலான ஆய்வுகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றார்.



**புத்தாண்டில் பிரிட்டன் பொருளாதாரம் மந்தமே!**

2012ஆம் ஆண்டில் பிரிட்டனின் பொருளாதாரச் சூழ்நிலை மிகவும் மந்தமாகவே இருக்கும். அத்துடன் நிதி நெருக்கடி நிலையும் தோன்றக்கூடும் என்று ஐரோப்பாவில் இயங்கும் ஆய்வுக்கழகம் எச்சரித்துள்ளது.

யூரோ வலய நெருக்கடியால் பாதிக்கப்பட்ட பல நாடுகள் தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த பலவிதமான கட்டுப்பாடுகளை அறிமுகம் செய்துள்ளன.

**பிரிட்டனை பின்தள்ளிய பிரேசில்**

லண்டனில் இயங்கிவரும் பொருளாதாரம் மற்றும் வர்த்தக ஆய்வு மையம் கடந்த வாரம் வெளியிட்டுள்ள உலகின் பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகளின் பட்டியலில் இதுவரை ஆறாவது இடத்தில் இருந்த பிரிட்டனை, பிரேசில் பின்னுக்குத் தள்ளி, அந்த இடத்தைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவுக்கு 5வது இடம்**

மிகப் பெரிய பொருளாதார நாடுகளில் இந்த ஆண்டு 10 ஆவது இடத்தில் உள்ள இந்தியா, திட்டமிட்ட வேகமான வளர்ச்சியின் பயனாக 2020ல் 5வது இடத்தைப் பிடிக்கும். அப்போது அமெரிக்கா, சீனா, ஜப்பான், ரஷ்யா முதல் 4 இடங்களில் இருக்கும்.

இந்தியாவைத் தொடர்ந்து பிரேசில், ஜேர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ் , இத்தாலி ஆகியன முதல் 10 இல் இடம்பெறும். இந்த ஆண்டில் அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ் ஆகியவை முதல் 5 இடங்களைப் பிடித்துள்ளன.

**உலகப் பொருளாதாரத்தின் எதிர்காலம்?**

ஐரோப்பிய பொருளாதாரம் சீரடையாத நிலையிலும் 2012 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் பொருளாதாரம் மீட்சி அடைந்து வருவதும், வளர்ந்துவரும் நாடுகளின் பொருளாதார நிலை வலுப்பெற்று வருவதும் உலகப் பொருளாதார வளர்ச்சிக்கு பக்கபலமாக அமையும் என்று கூறப்படுகின்றது.

உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் உலகளவில் முன்னணி நாடாகத் திகழ்ந்துவரும் அமெரிக்க பொருளாதாரத்தில் சிறிது முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

2012ஆம் ஆண்டு அமெரிக்கப் பொருளாதாரம் 2.2 சதவீத வளர்ச்சியை எட்டுமென உலகப் பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதேவேளை உலக அளவில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவு பல ஆண்டுகள் நீடிக்கும் என்றும், அதில் ரஷ்யா பெரும் அழுத்தத்திற்கு ஆளாகும் என்றும் அந்நாட்டு ஜனாதிபதி திமித்ரி டெவ்விடேவ் கூறியுள்ளார்.

மிகக் கடினமான காலகட்டத்தை நாம் எதிர்கொண்டுள்ளோம் என்கிறார் அவர்.




# இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2011 மூன்றாவது காலாண்டில் 8.4%

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி (GDP), கடந்த ஆண்டின் 3-வது காலாண்டில் 8.4 சதவீதம் என்ற அளவில் அதிகரித்துள்ளதாக இலங்கை தொகைமதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவே கடந்த 2010 ஆண்டில் 8 சதவீதம் என காணப்பட்டதுடன், கடந்த ஆண்டின் முதலாம், இரண்டாம், மூன்றாம் காலாண்டுகளில் முறையே 7.9% , 8.2% , 8.4% என தொடர்ச்சியான அதிகரித்த வேகத்தில் பதிவாகியுள்ளன.

கடந்த ஆண்டின் மூன்றாவது காலாண்டில் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய 3 துறைகளும் முறையே 6.2%, 10.8% , 7.8% என்ற அளவினால் வளர்ச்சி கண்டுள்ளன.

தலா தேசிய உற்பத்தியில் கடந்த வருடம் சேவைத் துறையே பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது. இதன் பங்களிப்பு 51.2 சதவீதமாகும்.

இதேவேளை, இலங்கை பொருளாதாரம் கடந்த 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் முறையே 6%, 3.5% மற்றும் 8 வீதம் என்ற அளவில் வளர்ச்சியினை காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செய்தித் துளிகள்...

**சம்பத் வங்கிக்கு புதிய தலைவர்**



சம்பத் வங்கிக்கு புதிய தலைவராக பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இன்று முதல் தனது கடமைகளைப் பொறுப்பேற்பார்.

**கொமர்ஷல் வங்கிக்கு தலைவராக தினேஸ் வீரக்கொடி**

கொமர்ஷல் வங்கிக்கு புதிய தலைவராக தினேஸ் வீரக்கொடி நியமிக்கப்பட்டுள்ளார்.

வங்கியின் தலைவராக இருந்த மகேந்திர அமரசூரிய இராஜினாமாச் செய்ததை அடுத்து இவர் கடமைகளைப் பொறுப்பேற்பார்.

2005இல் வங்கியின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுள் ஒருவராகவும் கடந்த ஆண்டு ஓகஸ்ட் முதல் பிரதித் தலைவராகவும் தினேஸ் வீரக்கொடிஉள்ளார்.



**டிசம்பர் பணவீக்கம் 4.9%**

டிசம்பர் மாதப் பணவீக்கம் 4.9வீதமாகும். இது நவம்பர் மாதம் 4.7சதவீதமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

**$ (வார இறுதியில்)**

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூ |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.01 | 114.88 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 173.45 | 177.73 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 145.37 | 149.59 |
| சுவிஸ் பிராங் | 119.11 | 123.14 |
| கனேடிய டொலர் | 109.92 | 113.39 |
| அவுஸ்திரேலிய டொலர் | 113.68 | 117.60 |
| சிங்கப்பூர் டொலர் | 86.32 | 88.91 |
| ஜப்பான் யென் | 1.44 | 1.49 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.15 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.00 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# 2-வது எண்ணெய் ஆய்வு கப்பல் இந்த ஆண்டு இலங்கை வரும்!

கெய்ன் லங்கா நிறுவனம் மன்னார் கடற்படுகையில் தோண்டிய இரண்டு கிணறுகளில் இருந்து இயற்கை எரிவாயு இருப்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கபட்ட நிலையில், அதனை மதிப்பீடு செய்வதற்காக இந்த வருட ஆரம்பத்தில் இரண்டாவது எண்ணெய் ஆய்வுக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வரவிருக்கிறது.

2011ஆம் ஆண்டில் இந்த இந்திய நிறுவனம் 78 மில்லியன் அமெரிக்க பொலர்களை இம் முயற்சியில் முதலீடு செய்துள்ளது.

கடந்த ஆண்டில் இதுவே ஆகக்கூடிய இந்திய முதலீடாக அமைந்துள்ளது.

கெய்ன் இந்தியாவின் கிளை நிறுவனமான கெய்ன் லங்கா நிறுவனத்தின் உரிமை இந்திய நிறுவனத்திடமே இருக்கிறது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் மன்னார் கடற்படுகையில் எண்ணெய் ஆய்வு வேலைகள் ஆரம்பமாகின. இந்தியாவின் கெய்ன் நிறுவனம் ஆய்வு வேலைகளில் ஈடுபட்டிருந்தது. மன்னாரில் இருந்து சுமார் 40 கிலோமீற்றர் ஆழ்கடல் பகுதியில் நடத்தப்பட்ட இந்த ஆய்வின்போது மேற்படி நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் பேர் ஆய்வுகளில் ஈடுபட்டனர்.

எண்ணெய் ஆய்வுக்காக ஜப்பானில் இருந்து தருவிக்கப்பட்ட சிக்கியூ எண்ணெய் ஆய்வுக் கப்பலில் அதிகளவு ஜப்பானியர்களே கடமையாற்றியிருந்தனர்.

3 கிணறுகளை அகழ்வதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இரண்டு கிணறுகளில் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டது. 3-வது கிணறு அகழ்வின்போது அக்கிணற்றில் எதுவித வாயும் இல்லையென்பது கடந்த டிசம்பர் 14-ம் திகதி கண்டறியப்பட்டதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

**(வார இறுதியில்)**

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5982.58 | 6074.42 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5189.86 | 5229.16 ⇧ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 2,750.06

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** ஈக்குவிட்டி ரூ (29.40), அகலவத்தை(49.80), லங்கிம் சிலோன்(260.00), ரெஸ் அக்ரோ(4.50), தலவாக்கலை(29.70).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** மொரிசன்(X)(149.00), மொரிசன்(285.00), இன்டஸ்ரியல் அஸ்ப(500.30), யூனியன் அசுரன்ஸ்(108.10), மெட்.ஏரஸ்.ஹோ.(23.70)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## பங்குச் சந்தையில் புதிய விலைச்சுட்டெண்

வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் கொழும்பு பங்குச்சந்தை எதிர்வரும் மார்ச் மாதம் புதிய விலைச்சுட்டெண்ணை அறிமுகம் செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சுட்டெண்ணுக்கு ஸ்ரான்டர்ட் அன்ட் புவர் (S&P) என பெயரிடப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சுட்டெண் ஒன்றைக் கொண்டிருப்பதன் மூலம் பெருமளவில் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மிலங்கா விலைச்சுட்டெணுக்குரிய நிறுவனங்கள் மீளமைப்பு

2012ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக்குரிய மிலங்கா விலைச் சுட்டெண்ணில் அடங்கும் நிறுவனங்களை பங்குச்சந்தை மீள்தரப்படுத்தியுள்ளது.

அந்த வகையில் இந்த சுட்டெண்ணில் புதிய உள்ளடக்கங்களாக சென்றல் பினான்ஸ், டிஎப்சிசி வங்கி, யூனியன் வங்கி, லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி, ப்ரீ லங்கா கப்பிட்டல், கொலம்பு லான்ட் மற்றும் வலிபல் வன் போன்றன அமைந்துள்ளன.

எதிர்பாராத விதமாக டயலொக் ஆக்சியாடா நிறுவனத்தின் பங்குகள் மிலங்கா சுட்டெண்ணில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ், ஜனசக்தி இன்சூரன்ஸ், ஜோன் கீல்ஸ் ஹோட்டல்ஸ், மேர்ச்சன்ட் வங்கி, நவலோகா ஹொஸ்பிட்டல்ஸ் மற்றும் பான் ஏசியா வங்கி போன்ற நிறுவனங்கள் நீக்கப்பட்டுள்ளன.

மிலங்கா விலைச்சுட்டெண்ணில் உள்ளடங்கியுள்ள இதர நிறுவனங்களாவன,

கொமர்ஷல் வங்கி, எச்என்பி, எல்பி பினான்ஸ், என்ரிபி, சம்பத் வங்கி, எயிட்கன் ஸ்பென்ஸ், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங், றிச்சட் பீரிஸ், சொப்ட் லொஜிக் ஹோல்டிங், சிலோன் கிறெய்ன், எல்வேட்டர்ஸ், பிரமல் கிளாஸ், றோயல் செரமிக், லாஃப்வ் காஸ், லங்கா ஹொஸ்பிட்டல்ஸ், பிரவுன் அன்ட் என்வயர்மென்டல் றிசோர்ஸ் ஹோல்டிங்ஸ்.

# அதிகாரப் பகிர்வு தொடர்பான ஜயலத்தின் கருத்து தனிப்பட்டது

## ஐ.தே.க தவிசாளர் தெரிவிப்பு

அதிகாரப் பகிர்வு தொடர்பில் கட்சியின் பிரதிப்பொதுச்செயலாளர் ஜயலத் ஜயவர்த்தன வெளியிட்ட கருத்தை ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாடாக கருத முடியாது என கட்சியின் தவிசாளர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாணசபைக்கு பகிரங்கப்பட வேண்டும் எனவும் அவ்வாறு பகிரங்கப்படாவிட்டால் 13ஆம் திருத்தச் சட்டமூலம் இரத்துச் செய்யப்படவேண்டும் எனவும் ஜயலத் ஜயவர்த்தன கோரியிருந்தார்.

காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்காது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இந்தக் கருத்தானது அவரின் தனிப்பட்ட கருத்து எனவும் கட்சியின் நிலைப்பாடு அதுவல்ல எனவும் காமினி ஜயவிக்ரம பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மிக முக்கியமான தேசிய பிரச்சினை தொடர்பில் கட்சியின் செயற்குழுவே தீர்மானங்களை வெளியிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனிப்பட்ட நபர்கள் கட்சியின் கொள்கைகள் பற்றி கருத்து வெளியிட முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் ஜயலத் ஜயவர்த்தனவின் கருத்தை கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாக கருத முடியாது என காமினி ஜயவிக்ரம பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.(அ-2)



யூனியன் அஷ்யூரன்ஸ் பி எல் சி யினால் சிவன் புதுவீதியை சேர்ந்த மெரர் வி. ரவீந்திராவின் ஆயுள் இழப்பீட்டுத் தொகைக்கான காசோலையை யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவன யாழ்.பிராந்திய முகாமையாளர் என்.சுகுணன் செல்வி ரவீந்திரா சுகன்யாவிடம் வழங்குவதையும் அருகில் காப்புறுதி ஆலோசகர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# பட்டாசுகளை கவனத்துடன் வெடிக்க வைக்க வேண்டும்

## சுகாதார அமைச்சு அறிவுறுத்தல்

புதுவருடக் கொண்டாட்டங்களின் போது அதிக கவனத்தடன் பட்டாசுகளை வெடிக்க செய்ய வேண்டும் என சுகாதார அமைச்சு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளதாவது, புதுவருட கொண்டாட்டகாலங்களில் ஏற்படுகின்ற அதிகளவிலான விபத்துக்கள் பட்டாசுக்களை வெடிக்க செய்வதால் நிகழ்கின்றன. ஏறக்குறைய 70 வீதமான விபத்துக்கள் பட்டாசு வெடிப்பினால் ஏற்படுவதாகவும் அதில் அதிகளவில் சிறுவர்களே பாதிக்கப்படுவதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பான முறையில் பட்டாசுகளை வெடிக்க செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பட்டாசுக்களை கைகளில் வைத்துக் கொண்டு வெடிக்க செய்வதை முற்றாக தவிர்த்துக்கொள்ளுமாறும் இத்தகைய வெடிப்பு செயன்முறையின் காரணமே விபத்துக்கள் அதிகம் ஏற்படுவதாகவும் அமைச்சு சூட்டிக்காட்டியுள்ளது.

அது தவிர குறிப்பாக சிறுவர்கள் பட்டாசுகளை வெடிக்க செய்யும் இடங்களிலிருந்து விலகியிருக்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறான விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் சுய மருத்துவ சிகிச்சையை மேற்கொள்ளாது அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கு அனுமதிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ள சுகாதார அமைச்சு பட்டாசுக்களின் வெடிப்புச் சம்பவங்களினால் பாதிக்கப்படும் சிறுவர்களில் அதிக்ளவிலானோரின் கண்களே பாதிப்புக்குள்ளாவதாகவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


★★★ Lux Etoiles

No. 34, Chetty Street Lane, Nallur, Jaffna
Tel : 021 222 3966 Fax :021 222 0606
www.luxetoiles.com

**Hotel Lux Etoiles**

2012 புதுவருட வாழ்த்துக்களுடன் யாழ். குடாநாட்டில் மிகப் பெரியதும், அழகாகவும் அமைந்திருக்கும் லக்ஸ் பூளில் (நீச்சல் தடாகம்) அங்கத்தவராய் சேர விரும்புவோருக்கும் அங்கத்துவம் பெறாமல் உபயோகப்படுத்த விரும்புவோருக்கு விசேட நிபந்தனைகளுடன் நீச்சல் செய்யவோ, பயிற்சி பெறவோ குழந்தைகள், குடும்பத்தினர், ஆண், பெண் இருபாலாருக்கும் வசதிகளும் நேரங்களும் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் மற்றும் நீச்சல் உடைகள் யாழ் கலாசாரத்திற்கு ஏற்ற முறையில் விற்பனைக்கு உண்டு என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(7093)


# வாகனங்களை முறையற்று செலுத்துவோருக்கு எந்தவித நிவாரணங்களும் வழங்கப்படமாட்டாது

## பொலிஸ் தலைமையகம் தெரிவிப்பு

(கொழும்பு)

புதுவருட கொண்டாட்டங்களின் போது வீதிகளில் வேகமாக மற்றும் மது அருந்திய நிலையில் வாகனங்களை செலுத்துபவர்களை கைது செய்வதற்காக தமது முழு பலத்தையும் பிரயோகிக்க உள்ளதாக பொலிஸ் தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது.

இதற்காக கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகள் விரிவாக்கப்படவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொது இடங்களில் மது அருந்திய நிலையில் வாகனங்களை செலுத்த வேண்டாம் என பொலிஸார் அறிவித்துள்ளனர். இதே வேளை போக்குவரத்து குற்றங்களை மேற்கொள்வோருக்கு எந்தவித நிவாரணமும் வழங்கப்படாது.

கிறிஸ்மஸ் பண்டிகை காலத்தில் விபத்துக்காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவங்களில் 580 சம்பவங்கள் கவனக்குறைவினால் ஏற்பட்டதாக தேசிய மரு துவமனை விபத்து சேவை பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பண்டிகைக் காலத்தில் 15 வாகனங்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவங்களையும் விசேடமாக மோட்டார் வண்டிகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவங்களையும் நாங்கள் பெற்றுக் கொண்டோம். எனவே வாகனங்களை பொது இடங்களில் தரித்துச் செல்பவர்கள் அவர்களது வாகனம் குறித்து கூடிய அவதானத்தை செலுத்துமாறு வேண்டுகோள் விடுகின்றோம்.

இதேவேளை பொதுமக்கள் தேவையற்ற பிரச்சினைகளில் ஈடுபட அல்லது தலையிட வேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான துரதிர்ஷ்டவசமான சம்பவங்களை தடுப்பதற்காக ஒவ்வொரு சாத்தியமான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# மஹாபொல புலமைப்பரிசில் பெறும் மாணவர் தொகையினை அதிகரிக்க முடிவு

பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல புலமைப்பரிசில் பெறுகின்றவர்களின் எண்ணிக்கையை மேலும் 300 ஆல் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த வருடம் 10 ஆயிரம் மாணவர்களுக்கு மஹாபொல புலமைப்பரிசில் வழங்கப்பட்டதாக கூட்டுவுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவிக்கின்றது.

அந்த எண்ணிக்கையை இந்த வருடத்தில் 10 ஆயிரத்து 300 ஆக உயர்த்தியுள்ளதுடன் அதன் பொருட்டு 222 மில்லியன் ரூபா மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என அமைச்சு குறிப்பிடுகின்றது. (அ-2)


இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

**Western Mobiles**

Accessories, Service, Repairs, Hard ware & Soft ware



T.P:- 0212220755 ,0770530370 ,0771553136

No:09 ,New market(Upstair)

Jaffna.

(7088)

# தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டத்தின் பிரதிகள் அமைச்சுக்களுக்கு விநியோகம்

## நவநீதம்பிள்ளைக்கு அனுப்பப்படும்?

(கொழும்பு)

நாட்டில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் அவற்றை ஊக்குவிப்பதற்குமாக தயாரிக்கப்பட்டுள்ள தேசிய செயற்பாட்டுவேலைத் திட்டத்தின் பிரதிகள் அமைச்சுக்களுக்கு விநியோகிக்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மனித உரிமைகள் தொடர்பான இந்தவேலைத்திட்டத்துக்கு அண்மையில் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தது. இதனையடுத்து இந்தத் திட்டத்தை எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

அமைச்சரவை அமைச்சர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள சில திருத்தங்களுடன் இந்தத் தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இந்நிலையில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அமைச்சுக்களின் அவதானத்துக்காக விநியோகிக்கப்பட்டுவருவ்தாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் விடயம் குறித்து ஜனாதிபதியின் தூதுவருமான மஹிந்த சமரசிங்கவின் தலைமையிலேயே இந்த தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டம் கடந்த சில வருடங்களாக தயாரிக்கப்பட்டு வந்தது.

இந்த திட்டத்தில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள், சித்திரவதைகளிலிருந்து மீள்தல், பெண்கள் உரிமை, சிறுவர் உரிமைகள், தொழிலாளர், இடம்பெயர்ந்தவர்கள் உரிமைகள் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மனித உரிமைகள் தொடர்பான தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டத்தின் பிரதி ஒன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் இந்த திட்டத்தின் அமுல்படுத்தல் மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பில் அடிக்கடி நவநீதம்பிள்ளைக்கு அறிவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அண்மையில் அமைச்சர் சமரசிங்க தெரிவித்திருந்தார்.

நாட்டில் மனித உரிமைகளை பாதுகாக்கவும் அவற்றை மேம்படுத்தும் நோக்கிலுமான இந்த தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டம் கடந்த 2008 ஆம் ஆண்டிலிருந்து சமூக நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் யோசனைகளை உள்ளடக்கி தாயரிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றோம்

SILVER SHIELD

புதுவருடத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு

மாபெரும் விலைக் கழிவு

கடந்த 30 ஆண்டுகளாக யாழ். நகர் மக்களின் தரச்சிறப்புமிக்க காலுறைகள்(SOCKS)

SILVER SHIELD SOCKS

பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும், சிறியோர் முதல் பெரியோர் வரை, சகல தரத்திலும், சகல அளவுகளிலும் பெற்றுக்கொள்ள



குறிப்பு:- பாடசாலைகளுக்கும், மொத்த வியாபாரிகளுக்கும் மேலதிக கழிவு வழங்கப்படும்.

ஸ்ரீ முருகன்



303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 5392

(சி-5388)



ஈழத்துச் சிதம்பர சிறப்பம்சம்

திருக்காட்சி காண தீரும் துயர் யாவும்

உள்ளதெலாம் எல்லார்க்கும் உவந்தளிக்கும் ஈசனவன்
வெள்ளமென அருள்பொழிந்து விளங்குவதும் இங்கன்றோ
வையகத்தை உழுதுண்ண வல்லாற் களித்தாராம்
கையில் நவநிதியம் கனிந் தொருவற் களித்தாராம்
விரும்பித் துதிப் போர்க்கு வீடளித்து நின்றாராம்
உருவில் ஒருபாதி உமைக்களித்து மகிழ்ந்தாராம்
திண்ணபுரம் மேவி எண்ணியதை தந்த வரின்
திருக்காட்சி கண்டால் தீரும் துயர் யாவுமிங்கே

மதுரகவி.காரை எம்.பி அருளானந்தன்

இன்று(2012.01.01) திருவெம்பாவை 3 ஆம் நாள்

விளம்பர அனுசரணை: சிவனடியான்

(7067)



IELTS

பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் 18.02.2012 இல் நடைபெறும். பரீட்சை எடுக்க இருப்பவர்கள் எமது நிலையத்தில் நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்துகொள்ளலாம்.

CITY COLLEGE OF ENGLISH

( திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில் )

143, Adiyapatham Road, Thirunelvely. T.P:021 321 6027, 0778803887

ESOL Diploma in English

City & Guilds Approved Centre

City & Guilds a Royal Charterd Institution is one of the world's leading Vacational qualification awarding bodies. எமது கல்லூரி City & Guilds Royal Charter இனதும் Cambridge பல்கலைக்கழகத்தினதும் பதிவு செய்த நிலையமாகும்.



IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்த இருப்பவர்கள் அடிப்படையில் இருந்து இந்த Diploma in English பாடநெறியைக் கற்று அதன் பின் IELTS பரீட்சையை எடுக்கலாம். 2000 Words இங்கு கற்பிக்கப்படும்.

B2, C1 மட்டங்களில் பல மாணவர்கள் எமது கல்லூரியில் பரீட்சையில் சித்தியடைந்து City & Guilds இன் சான்றிதழ்களையும் பெற்று வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்,

Our Lecturer

1. Mr.K.NAGARAJAN.B.A (Cey)
M.A(Kelaniya)
TKT (Cambridg.UK)
a.15 வருடங்கள் கிழக்குப் பல்கலைக்கழக ELTU வில்போதனாசிரியராக இருந்தவர்
b.20 வருடங்களுக்கு மேலாகத் திறந்த பல்கலைக்கழக வருகைதரும் English Tutor ஆக இருப்பவர்.
c. Served as a tutor for the promotion of the Quality improvement of Teachers by Secretary for Education chaired by the state Secretary for Education

திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரிக்கும் பாட நெறி City & Guildes, Diploma in English (A1, A2) மட்டுமே எல்லா மட்டங்களிலும் பூரண கல்வியைப் பெற்று எமது கல்லூரியில் பரீட்சையை எழுத முடியும்.

| | |
|---|---|
| Course Schedule | Mon - Tue - Wed - Thu - Fri |
| Duration | 2 Months (100 hours) |
| Time | 8.30 am - 10.30 am 10.30 am - 12.30 p.m |
| Commencement | 05.01.2012 |

வகுப்புக்கள் : 05.12.2012 ஆரம்பம்



After - A/L
Now Prepare for Your

Spoken English & International ESOL

City & Guilds

The Diploma is suitable for anybody. The qualification covers all four language skills and so is recognised as a good assessment of a leaner's overall language ability by universites and the UK Borders Agency (UKBA), The UKBA accepts the International ESOL Diploma as proof of language ability for migrants wishing to work and / or live in the UK.

SPOKEN ENGLISH-
INTERNATIONAL CERTIFICATE IN SPOKEN ESOL

This is a new , reliable and user friendly test of up grading real speaking ability in English

The International ESOL Diploma Covers all four Language skills
Reading, Writing, Listening and Speaking

A/L சித்தியடைந்து பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைத் தொடர நல்ல ஆங்கில அறிவு அவசியமாகும். Medicing Engineering, Management போன்ற துறைகளை ஆங்கில மொழிமூலம் கற்பதற்குத் தேவையான ஆங்கில அறிவை இந்த Dip.In.English (U.K) பாடநெறியைப் படிப்பதன் மூலம் இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும்.

குறுகிய காலத்தில் பூரண ஆங்கில அறிவினைப் பெற சரளமாக எந்தச் சூழ்நிலையிலும் ஆங்கிலத்தில் பேச இலக்கணப்பிழைகள் இல்லாமல் எழுத எந்த ஆங்கிலப் பத்திரிகையையும் இலகுவில் படிக்க ஏற்ற ஓர் பாடநெறி.

CITY COLLEGE OF ENGLISH

(திருநெல் வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)

143 ,Adiyapatham Road, Thirunelvely. T.P:021 321 6027 , 00778803887

## பாலஸ்தீனத்தின் வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருகை

(கொழும்பு)

பாலஸ்தீன வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ரெயிட் மல்கி இரண்டு நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு நாளை திங்கட்கிழமை இலங்கை வரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசின் அழைப்பை ஏற்று இலங்கை வரும் இவர் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை வரை தங்கி யிருப்பார் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட பலருடன் பாலஸ்தீன வெளிவிவகார அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளதாக அப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதன்போது அரசியல் ஆலோசனை தொடர்பிலான இராஜதந்திர உடன்படிக்கையொன்று இருநாட்டு வெளிவிவகார அமைச்சர்களுக்கிடையில் மேற்கொள்ளப்படவுள்ளதாக பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# சமூகவிரோத செயல்களில் ஈடுபடுவோரை பொலிஸாருக்கு இனங்காட்டுங்கள்

## யாழ்.பொலிஸ் தலைமை அதிகாரி

சமூக விரோத குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களை பொது மக்கள் பொலிஸாருக்கு அடையாளம் காண்பிப்பதற்குப் பின் நிற்க வேண்டாம் என யாழ். பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் அதிகாரி சமன்சிகேர தெரிவித்தார்.

கிராமங்கள் ரீதியாக தெரிவு செய்யப்பட்ட சிவில் பாதுகாப்புக்குழு அங்கத்தவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் நிலவிய ஸ்திரமற்ற சூழ்நிலைகளின் போது மக்கள் பேரிடர்களை எதிர்நோக்கியிருந்தனர். களவு, கொள்ளை போன்ற சம்பவங்களினாலும் கிறிஸ் பூதம் போன்ற சர்ச்சைகளினாலும் மக்களின் வாழ்க்கை அச்சம் நிறைந்ததாகவே காணப்பட்டது. எனினும் கிராமங்கள் ரீதியாக ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்புக்குழுக்கள் இவ்வாறான பிரச்சினைகளை ஓரளவு குறைத்திருந்தன.

இவ்வாறான பீதிதரும் சம்பவங்கள் இன்று இடம்பெறாவிடினும் கிராமங்களில் பொலிஸாரினால் அறியமுடியாத துஷ்பிரயோகங்கள், போதைப் பொருட்கள், கசிப்பு உற்பத்தி, களவு, குடும்ப வன்முறைகள் என்பன அதிகரித்து வருகின்றன. இவ்வாறான பிரச்சினைகளை இனம் காண்பதற்காகவே இப் பாதுகாப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

கிராமங்களில் இடம்பெறும் சிறு பிரச்சினைகளை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லாமல் சிவில் பாதுகாப்பு குழுவும் அக் குழுவிற்கு நியமிக்கப்பட்ட பொலிஸாரும் இணைந்து தீர்த்து வைப்பதே இதன்நோக்கமாகும். பொது மக்களுக்கு ஏதாவது இடையூறுகள், பிரச்சினைகள் ஏற்படுத்துபவர்களினை இக்குழுக்களின் பிரதிநிதிகளுக்கு மக்கள் அடையாளம் காட்டுவதன் மூலம் நாம் அப் பிரதிநிதிகள் ஊடாக குற்றமிழைத்தோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம்.

இக்குழுக்களினால் மக்களின் எல்லா பிரச்சினைகளையும் வெளிக்கொணர முடியும். சில பிரச்சினைகளை பொலிஸாரிடம் தெரிவிப்பதில் மக்கள் தயக்கம் காட்டுகின்றனர். இக்குழுக்களின் அங்கத்தவர்கள் அக்கிராமங்களினைச் சேர்ந்தவர்கள் என்பதனால் எல்லோரும் அவர்களை அறிவார்கள். இதனால் வெளிவராத பிரச்சினைகளை வெளிக்கொணர முடியும். இவ்வடையாள அட்டை மதகுருமார்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், சமூகத்தில் ஈடுபாடு கொண்டவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக களவு, போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. இவ்வாறான சமூக விரோதச் செயல்களினை கட்டுப்படுத்துவதே எமது முக்கிய நோக்கமாகும். இன்று சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் இவ் அடையாள அட்டையினை இராணுத்தினரிமும் காட்டி தம்மை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.நாம் இக் குழுக்களை ஆரம்பித்ததன் பிரதான நோக்கம் மக்களுக்கும் பொலிஸாருக்குமான தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களின் பிரச்சனைகளை கண்டறிந்து தீர்த்து வைப்பதற்காகும்.இதனால் மக்கள்- பொலிஸ் உறவு வலுவடையும்.

இந்த சிவில் பாதுகாப்பு அடையாள அட்டை பெறுமதி வாய்ந்ததாகும். இதனை நல்ல விடயங்களுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். சமூக விரோத செயல்களுக்கு இதனை பயன்படுத்த வேண்டாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.இந்நிகழ்வில் யாழ். பொலிஸ் நிலைய பிரதிப் பொலிஸ் பரிசோதகர் குணசேகர, யாழ். பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பாடல் பிரிவின் உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஜயந்த, கிராமசேவையாளர்கள், மதகுருமார்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ-4-2)

# கிளர்ச்சியின்போது மூவரை கொலை செய்தவர்களுக்கு மரண தண்டனை

ஜே.வி.பி. கிளர்ச்சிகள் இடம்பெற்ற 1989 ஆம் ஆண்டு காலத்தில் மூன்று பேரைக் கடத்திச் சென்று படுகொலை செய்த மூவருக்கு கண்டி மேல் நீதிமன்றம் நேற்று முன் தினம் மரண தண்டனை விதித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணைகள் 2002 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடத்திச் செல்லப்பட்டவர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் இந்தப் படுகொலைச் சம்பவத்துடன் 12 பேர் தொடர்புபட்டிருப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும் இவர்களில் ஒன்பது பேர் குற்றமற்றவர்கள் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் கபிலரட்ன பண்டா, காமினி விஜேசூரிய மற்றும் எம்.பி உக்கு பண்டா ஆகியோருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# உயர்தர பெறுபேறுகள் குறித்த ஜனாதிபதியின் குழு அர்த்தமற்றது

## விஜித ஹேரத் தெரிவிப்பு

உயர்தரப் பெறுபேறுகள் தொடர்பிலான ஜனாதிபதியின் குழு அர்த்தமற்றது என தெரிவித்துள்ள ஜே.வி.பி. அது காலத்தை விரயமாக்கும் செயற்பாடாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

மூன்று இலட்சம் மாணவர்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு பேராசிரியர்கள் மற்றும் புலமையுள்ள ஆசிரியர்கள் கொண்ட சபையொன்றை அமைத்து பரீட்சை பெறுபேறுகளில் இடம்பெற்றுள்ள குளறுபடிகளுக்கு உண்மையான தீர்வு கண்டு சரியான பெறுபேறுகளை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இடம்பெற்றுள்ள தவறுகளை அதிகாரிகள் மீது பழி சுமத்திவிட்டு தப்பித்துக் கொள்ளும் நோக்கிலேயே அமைச்சர்கள் செயற்பட்டு வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் கல்வித்துறையில் அரசியல் புகுந்திருப்பதே அதன் நிர்வாக சீர்கேட்டுக்கும் வழி வகுத்திருக்கின்றது என்றும் குறிப்பிட்ட அவர், மாணவர்களின் எதிர்காலத்தோடு விளையாட வேண்டாம் என்றும் கூறினார். (அ-2)

# இறுதிக்கட்ட யுத்தத்தில் சிக்கிய மக்களுக்கு இனங்காணமுடியாத புதியவகை சுவாசநோய்

## யாழ்,கிளி,முல்லை மாவட்டங்களுக்கான காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி

வன்னி இறுதிப்போரின் போது முள்ளிவாய்க்கால் பகுதியில் சிக்குண்டிருந்த மக்களில் 90 சதவீதமானவர்கள் இலங்கைக்கு இதுவரை அறிமுகமில்லாத மோசமான புதியவகை சுவாச நோயொன்றின் தாக்கத்திற்குள்ளாகியிருப்பதாக யாழ். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி எச்சரித்துள்ளார்.

இறுதி யுத்தத்தில் சிக்குண்டிருந்த மக்களிடையே மேற்கொண்டிருந்த ஆய்வில் இந்த அதிர்ச்சி முடிவு தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.இதில் மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது,

இறுதிப்போரின் போது சனத்தொகை அடர்த்தியான பகுதிகளுக்குள் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான எறிகணை வீச்சுக்களால் இந்தப் பாதிப்பு மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

எறிகணை வீச்சுக்களின் போதும் அவற்றின் வெடிப்பின்போதும் அதிலிருந்து கிளம்பும் மண் துகள்கள் மற்றும் நுண்ணிய வெடி மருந்து துகள்கள் ஆகியவற்றை சுவாசித்ததன் மூலம் இலட்சக்கணக்கான மக்கள் இந்த நோயினால் தாக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நோயின் தாக்கத்திற்குள்ளான மக்களின் உடலில் மணல் மற்றும் வெடிமருந்து துகள்கள் இருப்பதாகவும் இதனை யாரும் நேரில் அறிந்து உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் எனவும் கூறினார்.

இந்நோய் *pneumono ultra micro scopic silico volcano coniosis* என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றது. 45 எழுத்துக்களைக் கொண்ட உலகத்தில் மிக நீளமான சொல்லாக இந்தநோயின் பெயர் உள்ளது.இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களை புற்று நோய், காசநோய், சுவாச அலற்சி என்பன எளிதில் தாக்கும் அபாயம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நோயின் தாக்கம் வெளியில் தெரியவர 20 வருடங்கள் கூட எடுக்கலாம். எரிமலை வெடிப்பின் போது அதிலிருந்து வெளியாகும் தூசி மண்டலம் மற்றும் நுண் துகள்களை சுவாசிக்கும் மக்கள் இந்த நோயின் தாக்கத்திற்குள்ளாகியிருக்கின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

துரதிர்ஷ்டவசமாக இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் சிக்கியிருந்த மக்களில் சுமார் 90 சதவீதமான மக்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என கவலை தெரிவித்த வைத்தியகலாநிதி, ஒரு எரிமலை வெடிப்புக்கு ஒப்பான அல்லது அதற்கு மேலான தாக்கத்தை முள்ளிவாய்க்காலில் மக்கள் எதிர் கொண்டிருக்கின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

இத்தகைய பாரியதொரு பாதிப்பை எமது மக்கள் எதிர்கொண்டிருப்பது குறித்து ஒரு சுவாசநோய் வைத்தியர் என்ற வகையில் எச்சரிக்கவேண்டியது எனது கடமை. இந்நோய் குறித்து அவசர ஆய்வுகளை மேற்கொண்டு இதன் தாக்கத்தை கட்டுப்படுத்த உலக சுகாதார நிறுவனம் உள்ளிட்ட சுகாதார அமைப்புக்கள் முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

சாவகச்சேரியில்
20% தள்ளுபடியுடன்
மாபெரும்
மலிவு விற்பனை
இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
பெண்களுக்கான அழகிய சல்வார், சாறி, கொட்டன் சாறிகள்
சிறுவர்களுக்கான ஆடைகள்
மரியம்'ஸ்
பெண்களுக்கான பெருமை மிகுந்த ஆடையகம்
இடம் : "கலா காமெண்ட்"
16A, கண்டி வீதி, சாவகச்சேரி. (கொமஸியல் வங்கி அருகில்)
திகதி : 01.01.2012-14.01.2012 வரை
நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
அநேகரின் வேண்டுகோளிற்கிணங்க தைப்பொங்கல் வரை நீடிக்கப்பட்டுள்ளது
என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
5000/= இற்கு அதிகமாக கொள்முதல் செய்தால்
800/= பெறுமதியான அழகிய With பிளஸ் கொட்டன் சாறி Free
தொடர்புகளுக்கு : 0777140844, 0718034848
(7063)

கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.

~ சுபாஸ் சந்திரபோஸ்

வலம்புரி

T.P. 021 567 1530

Web: www.valampurii.com

e-mail: editor@valampurii.com

# 2012ஆம் ஆண்டின் வருகை

2012ஆம் ஆண்டின் முகிழ்ப்பு இன்று.

ஆங்கில வருடம் என்று நாம் கூறிக்கொண்டாலும் நிர்வாக செயற்பாடுகள் அத்தனையும் ஆங்கில ஆண்டை மையமாகக் கொண்டிருப்பதால், ஆங்கிலப் புத்தாண்டின் பிறப்பை உலக மக்கள் அனைவரும் வரவேற்கின்ற நடைமுறை உண்டு.

அவ்வகையில் இன்று மலரும் 2012ஆம் ஆண்டை நாமும் இருகரம் கூப்பி வரவேற்போம்.

புத்தாண்டின் பிறப்பில் நாம் புது மனிதர்களாக – உண்மைகளைக் கண்டறியும் மெய்யறிவாளர்களாக – மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பக்குவம் உடையவர்களாக– அன்பும் இன்சொல்லும் இனியன கூறலுமாக எங்களை நாங்கள் நிமிர்த்திக் கொள்வதாக உறுதி செய்வோம்.

எங்கும் இன்சொல், எங்கும் நல்ல அணுகுமுறை என்ற உயரிய நிலைமை ஏற்படுமாக இருந்தால் மனிதம் மதிக்கப்படும்.

ஏழைகள், பாமரர்கள் என்ற பேதம் நீங்கி எல்லோரும் இந்த நாட்டின் சமத்துவம் உடைய மக்கள் என்ற நீதித்துவம் நிலைநாட்டப்படும்.

அரச அதிகாரிகள், பணியாளர்கள் தங்கள் கடமைகளை செவ்வனே நிறைவேற்ற திடசங்கற்பம் பூணவேண்டும்.

மனித உழைப்பும் மனித மணித்தியாலங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை. எனவே எவரையும் எந்த சந்தர்ப்பத்திலும் அலைக்கழிக்க மாட்டோம். பொதுமக்களோடு அன்பாகப் பேசி முடிந்தளவில் அவர்களின் தேவைக[illegible] நிறைவுசெய்து கொள்வோம் என சத்தியம் செய்வோம்.

2012ஆம் ஆண்டின் பிறப்பு தமிழ் சமூகத்திற்கு மிகப்பெரும் சவாலாக அமையும் என்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

ஏற்றத்தாழ்வடையும் உலகப் பொருளாதார சூழ்நிலைகள், இடையிடையே மனித சமூகத்தை அதட்டும் இயற்கையின் சீற்றங்கள், உரிமைகளை வழங்க மறுக்கும் தரப்புகள், ஆழ ஊடுருவியுள்ள போதைப் பாவனைகள் , வேலை செய்வதில் வெறுப்படையும் இளைஞர் சமூகம், எங்கள் பண்பாட்டுச் சிதைவுகள், கலாசார எல்லைமீறல்கள் என எல்லாம் எம்மை அச்சுறுத்துவதாக இருப்பதும், அத்தகைய அச்சுறுத்தலையே 2011ஆம் ஆண்டு நமக்கு விட்டுச் சென்றுள்ளதை நாம் ஒரு கணம் நினைவிற் கொள்ளுதல் அவசியம்.

2012ஆம் ஆண்டில் தமிழ் சமூகம் தலை நிமிர்ந்து வாழவேண்டும். எங்களிடம் இருக்கக் கூடிய பலவீனங்களை அறுத்தெறியவேண்டும்.

நாம் தமிழர்கள் என்ற மன உறுதியோடு எங்களுக்குள் ஒரு பலமான ஒற்றுமையை உருவாக்கிக் கொள்வதே எங்கள் இனத்தின் மீட்சிக்கான ஒரேவழி.

இதற்காக இறைவனைப் பிரார்த்திப்போம். நேரிய மனப்பாங்குடன் எங்கள் பயணத்தை ஆரம்பிப்போம். எல்லாம் இறைவன் துணையோடு இன்பமாக அமையும்–அமையட்டும்.

# திருவெம்பாவை 03



திருச்சிற்றம்பலம்

முத்தன்ன வெண்நகையாய் முன்வந்து எதிர் எழுந்து என்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள் ஊறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடி யோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோனின் அன்புடமை எல்லோம் அறியாமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

*தோழியர்: இனிமையான வார்த்தைகளால் பலவாறு புகழ்ந்து பேசிய நீ, இன்று சாத்திய கதவைத் திறக்காமல் தூங்கிக்கொண்டு இருக்கிறாயே என்று தோழிகள் கூறினர். அதற்கு அவள் சிவபெருமானின் மீது பக்தி உடையவர்கள் நீங்கள். ஆனால் நானோ புதியவள். எனக்கு ஏற்பட்ட அறியாமையை நீக்கி என்னை அவன் ஆட்கொண்டால்தான் என்ன? என்றாள். அதனைக்கேட்ட தோழிகள் உனது அன்பைப் பற்றி எங்களுக்குத் தெரியாதா என்ன? ஆனால் நாம் எல்லாம் சிவனைப் பாடவேண்டும் என்ற ஆசையால் தானே அழைக்கின்றோம். ஆனால் உங்களை எழுப்ப வந்ததற்காக எங்களுக்கு இது தேவைதானா? என்றனர்.*

**(இன்று திருவெம்பாவை மூன்றாம் நாள்)**

# இலவச நடமாடும் மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் அனுசரணையுடன் அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தரும் மருத்துவ குழுவினால் இலவச நடமாடும் மருத்துவ சேவை முகாம் இடம்பெறவுள்ளது.

இந்நடமாடும் சேவை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை பின்வரும் இடங்களில் இடம்பெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை நயினாதீவு பிரதேச வைத்தியசாலையிலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையிலும் மறுநாள் புதன்கிழமை மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையிலும் நடைபெறும் என யாழ்.சுகாதார சேவைகள் பணிமனை பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)

# அதிவேக நெடுஞ்சாலையில் இ.போ.ச. பேருந்து சேவை ஆரம்பம்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் இ.போ.சபை பேருந்து சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக சபையின் தலைவர் எம்.டி.பந்துசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இ.போ.ச.வின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இச்சேவை காலி தரிப்பிடத்திலிருந்து ஆரம்பமாகி மஹரகம பேருந்து தரிப்பிடத்தை வந்தடையும். இற்கான ஒரு வழிப் பயணக் கட்டணம் 400 ரூபாவாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



அகண்ட வெளியிலே அப்பனு மம்மையும்
அகண்ட வெளியிலே யாருமி ரெல்லாம்
அகண்ட வெளியிலே யஞ்சுபூத ங்களும்
அகண்ட வெளியிலே யானிருந் தேனே

அண்டமும் பிண்டமு மகத்திற் கண்டேன்
அண்டமும் பிண்டமு மகமாய்க் கண்டேன்
அண்டமும் பிண்டமு மகத்திற் கண்டிலேன்
அண்டமும் பிண்டமு மாயிருந் தேனே

# புதிய வரலாற்றுக்குள் பயணம் செய்வோம் புதிய வரலாற்றைப் பயணம் செய்யவைப்போம்

என் வாசகர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறி இன்று தொடங்கும் இந்தப் புதிய ஆண்டில் நலமும் வளமும் பெருகி இறை ஆசீரை நிறைவாகப் பெற்று வாழ நாம் செபிக்கின்றோம். இன்று நாம் மூன்று பெரும் விழாக்களைக் கொண்டாடுகின்றோம் என்று கூறலாம். அன்னைமரியா இறைவனின் தாய் என அறிவிப்பு விழா, இயேசுவுக்கு பெயர் சூட்டப்பட்ட விழா, 2012 ஆம் ஆண்டு தொடக்கநாள் விழா.

திருச்சபை கன்னிமரியாவைக் கடவுளின் தாயாகப் போற்றிச் சிறப்பிக்

## பரமபிதா காட்டிய பாதை

கிறது. இன்று சிறப்பான வகையில் சாதாரண மனிதப் பெண்ணான மரியா இயேசுவின் தாயானதால் இறைவனின் தாயான மாண்பினை பெருமையுடன் நினைவுகூர்ந்து விழா கொண்டாடுகின்றது.


கடவுளின் தாய்மை வெவ்வேறு வழிகளில் வெளிப்பட்டாலும் மரியா வழியாக அது சிறப்பான விதத்தில் உயர்வு பெற்றது. மரியா கடவுளின் தாய் என அழைக்கப்படுவதற்கு அவர் கடவுளின் மகனை நமக்கு ஈந்தளித்த செயலே முக்கியகாரணம் ஆகும்.

இந்தப் புத்தாண்டையும் இறைவனின் தாயும் நம் விண்ணக அன்னையுமான மரியாவின் ஆசியோடு நாம் தொடங்குவோம்.

மரியாவையும் யோசேப்பையும் குழந்தையையும் கண்டார்கள். வான தூதர் சொல்லியிருந்தவாறு எட்டாம் நாள் குழந்தைக்கு இயேசு என்று பெயரிட் டார்கள். இயேசு என்னும் சொல் மீட்பர் எனப் பொருள்படும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் யோசுவாவும் இவ்வாறே மீட்பர் என்று அறியப்பட்டார்.

இயேசு கொண்டு வரும் மீட்பு நம்மை கடவுளோடு நெருங்கிய விதத்தில் இணைகின்றது. கடவுளின் வாழ்வில் நமக்கு பங்கு வழங்குகின்றது. நம்மை பிரிக்கின்ற அனைத்தையும் கடவுள் இயேசுவின் வழியாக நம்மிலிருந்து அகற்றி விடுகின்றார். தடைகள் அகலும் போது பிறவிகளாக மாறுகின்றோம். புத்தாண்டில் நாம் அந்த மாற்றத்துடன் புதுமை பெற்று வாழ்ந்திட முன்வருவோம்.

இறைவாக்கை கேட்பவர் இயேசுவின் தாய் ஆவார் என இயேசு கூறினாலும் இறைவார்த்தைக்கு முழுமையாக மரியா சரணடைந்ததனால் மகனே என்று இயேசுவை அழைக்க இறை தந்தைக்கு அடுத்த நிலையில் உரிமை உள்ளவரானார் நம் தாய் மரியா என்று கூறலாம். மகனே ஏன் இப்படிச் செய்தாய் என்று விளித்த மரியா கானாவூர் திருமண வீட்டாருக்குப் பரிந்துரைத்த போதும் மகனே என்று விளித்து அவர்களுக்கு இரசம் தீர்ந்து விட்டது என்று சொல்லப்படும் வாய்ப்பைக் கொண்ட வகையில் உயரிய பரிந்துரையாளரானார் நம் தூய கன்னிமரியா.



அவர் சொன்னதை மனதில் இருத்தி அவர் சொன்னதை செய்து இயேசுவின் மதிப்பீடுகளின் படி வாழ்வோம்.

தூய கன்னிமரியாவைப் பின்சென்று இறைவனின் மக்களாக வாழ தொடர்ந்து ஒரு புதிய ஆண்டைத் நமக்குத் தந்து நம்மை இறைவன் வாழவைத்துள்ளார். இப்புதிய ஆண்டில் புது உணர்வு கொள்வோம். புது முயற்சிகள் மேற்கொள்வோம். புது உறவுகள் வளர்ப்போம். இறைவனுக்கு நன்றி உள்ளவராய் வாழ்வோம். நம்மைச் சுற்றியுள்ளவரை மனதார அன்புடன் நலமாய் வாழ ஊக்கமூட்டுவோம். அன்னைக்கு ஏற்ற பிள்ளைகளாய் ஆண்டு முழுவதும் இறை அருளிலும் அமைதியிலும் நிறைவுடன் வாழ்ந்திட வரம் வேண்டுவோம்.


**ம. பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

















தோற்றம் 10.01.1966 — மறைவு 01.01.2008

## திரு. தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்துக் கலாசார அமைச்சரும் யாழ். கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்)

### ஆனந்தக்கூத்தன் அறப்பணியில் நின்றாரே..!

எங்கள் பாசமிகு அப்பா புதுவருடப் பிறப்பன்று பொன்னம்பலவாணேச்சரம் புறப்பட்டார். நான்கு ஆண்டுகள் நகர்ந்தும் ஆசை அப்பா வரவில்லை. அப்பாவைக் காணாமல் அனுதினமும் அழுகின்றோம். எங்கள் அருமை அப்பா எங்கள் மூவரையும் அன்பாகப் பெற்று வளர்த்தீர்கள். பெயர் சூட்டி மகிழ்ந்தீர்கள். பாங்குடனே பள்ளி அனுப்பி படிக்க வைத்தீர்கள். தினமும் கவனிக்க அப்பாவிற்கு ஆயிரம் பணிகள் காத்திருக்கும். ஆனாலும் எங்கள் அருமை அப்பா அப்பணிகள் மத்தியிலும் எங்களை மறந்ததில்லையே!

வீட்டிற்கு விரைவாய் வருவீர்கள். விதம் விதமான வாகனத்தில் வெளியில் அழைத்துச் செல்வீர்கள். விரும்பிய பண்டங்கள் விருப்பமுடன் வேண்டித்தருவீர்கள். மாலைவந்தவுடன் அப்பாவின் மகிழ்வான வரவைப் பார்த்திருப்போம். அப்பா வந்தவுடன் கைகால் முகம் கழுவி கடவுளை துதிப்போம். எல்லோரும் ஒன்றாய் இருந்து உணவை ருசியாய் சாப்பிடுவோம். அப்பாவுடன் ஓடி விளையாடி விட்டு நித்திரைக்குச் செல்வோம். அப்பா மீது துள்ளி விளையாடுவோம். நடந்த கதைகளை விருப்பமாய் அப்பாவிற்கு விளக்கமாய்ச் சொல்வோம். எங்கள் செல்லக்கதை கேட்டு அப்பா சிந்தை மகிழ்ந்திடுவார். எங்களை அள்ளி அணைத்திடுவார். நாங்கள் அன்பு முத்தங்களை அப்பாவிற்கு அள்ளி அள்ளிச் சொரிவோம்.

அதிகாலை அப்பா தேவாரம் பாடி தினமும் எழும்பிடுவார். காலைக்கடன் முடித்தபின் அப்பாவுடன் கடவுளை வணங்குவோம். பள்ளிக்கு செல்லமுன் பக்குவமாய் வேண்டும் பொருள்களை விபரமாய் மூவரும் கூறுவோம். அந்திப் பொழுதிலே அப்பா வருவார். நாம் சொன்ன பொருட்களையும் சொல்லாத பொருட்களையும் அப்பா அள்ளி வந்து தருவார். ஆனந்தமாய் நாங்கள் பெறும்போது அள்ளி அணைத்திடுவார். அன்பு சொரிந்திடுவார்.

ஆசை அப்பாவே அம்மாவையும், எங்கள் மூவரையும் விட்டு எங்கு சென்றீர்கள்? இன்று எங்கள் அன்பு அம்மா, அப்பாவாகவும் அன்பு செய்கிறார். அணைத்து வளர்க்கிறார். விரும்பிய இடமெல்லாம் அழைத்துச் செல்கிறார். ஆனால்! அப்பா உங்கள் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது. உங்கள் அன்பை யாராலும் பொழிய முடியாது. எங்களுக்கு அம்மா எல்லாம் அள்ளித் தந்தாலும் அப்பா! உங்கள் நினைப்பை மறப்போமா! உங்கள் நேசத்தை மறப்போமா அன்பை மறப்போமா! ஆதரவை மறப்போமா! அப்பா அரவணைப்பில்லாமல் ஏங்கித் தவிக்கிறோம். என்செய்வோம் அப்பா! நீண்ட நாள் சென்றும் நீங்கள் மீண்டுவரவில்லை. எங்கள் மிக்க துயர் தீர்க்கவில்லை. அப்பா தினமும் நாங்கள் உங்களை வணங்குகிறோம்.


எங்கள் அன்பு அப்பா! ஈழத்துச் சிதம்பர ஆனந்தக்கூத்தன் அடிபணியைத் தொடர்கின்றார்.


ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தகவல்:
திருமதி விஜயகலா
மகேஸ்வரன்
இல.32, 36ஆவது ஒழுங்கை
கொழும்பு - 06
தொ.பே:2360679

பவதாரணி (மகள்)
பிரணவன்( மகன்)
பவித்திரா( மகள்)

276, பலாலி வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
0212227559













## இறுதிப் போரில்...

வேறு சில அமைப்புக்களோ 10 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கூறுகின்றன. இன்னும் சில தனிநபர்கள் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக சொல்கின்றன.

ஆனால் எந்த அமைப்பிடமும் கொல்லப்பட்ட பொதுமக்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் இல்லை.

உண்மையில் 2009-ம் ஆண்டு தொடக்கம் மே வரையான காலப்பகுதியில் ஆயிரத்து 400 பொதுமக்களே கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த காலப்பகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 200 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மீதம் ஆயிரத்து 200 பொதுமக்களும் படையினரின் தாக்குதல்களிலேயே கொல்லப்பட்டனர். ஆனால் இவர்கள் வேண்டுமென்றே கொல்லப்பட வில்லை.

விடுதலைப்புலிகளின் மீது அவர்களின் நிலைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களிலேயே பொதுமக்கள் கொல்லப்பட்டனர். எவ்வாறாயினும் ஆயிரத்து 200 பொதுமக்களினதும் மரணங்களுக்கு படையினரே பொறுப்பு.

போரின் இறுதி மூன்று ஆண்டுகளில் 12 ஆயிரம் புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். இந்தக் காலகட்டத்தில் 6 ஆயிரம் படையினர் கொல்லப்பட்டதுடன் 29 ஆயிரம் பேர் காயமடைந்தனர். ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கப் படையினர் பங்கேற்ற படை நடவடிக்கைகளில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களுடன் ஒப்பிடும்போது இலங்கையில் போரின்போது பொதுமக்கள் கொல்லப்பட்டது மிகமிகக் குறைவு.

இலங்கை அரசாங்கம் மூன்று முக்கியமான தவறுகளை இழைத்துள்ளது.

போர் முடிபுக்கு வந்ததும் இலங்கை அரசாங்கம் ஒரு வெள்ளை அறிக்கையை உடனடியாகச் சமர்ப்பிக்கவில்லை.

ஒரு மோதலின் முடிவில் ஒரு மாதங்களுக்குள் உண்மையான இழப்பு விபரங்களுடன் கூடிய வெள்ளை அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படுவது வழக்கம்.

ஆனால் அதனை இலங்கை அரசாங்கம் செய்யாதது முதலாவது தவறு. மிகவும் தாமதமாக சில மாதங்களுக்கு முன்னர் தான் அந்த வெள்ளை அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கம் இந்த அறிக்கையை சமர்ப்பிக்கத் தாமதித்த காலப்பகுதியில் விடுதலைபுலிகள் மதிப்புமிக்க சர்வதேச மனித உரிமை அமைப்புக்களை தம் பக்கம் இழுத்துக் கொண்டுவிட்டனர்.

இலங்கை அரசு செய்த இரண்டாவது தவறு ஐ.நா.நிபுணர் குழுவை இலங்கைக்கு அழைக்காதது.

அந்தக் குழுவை கொழும்புக்கு அழைத்து உண்மையான தகவல்களை வழங்கி நிலைமையை நேரில் பார்வையிட அனுமதித்தால் அந்தக் குழு தவறான தகவல்களுடன் கூடிய அறிக்கையை சமர்ப்பித்திருக்காது.

அவர்களை அனுமதிக்க மறுத்ததால் ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை ஒருபக்க தகவல்களை மட்டுமே கொண்டதாக வெளியானது. தவறான பரப்புரைகளை முறியடிக்கும் பொறுப்பை நிறைவேற்ற வெளிவிவகார அமைச்சு தவறிவிட்டது.

பாதுபாப்பு அமைச்சு தகவல் ஊடக அமைச்சுடன் இணைந்து விடுதலைப் புலிகளின் பரப்புரைகளை முறியடிக்க வேண்டிய பொறுப்பை வெளிவிவகார அமைச்சு மேற்கொள்ளவில்லை

24 மணிநேரமும் செய்திகளை கூர்ந்து அவதானித்து இலங்கைக்கு எதிரான செய்திகள் வரும்போது 6 மணி நேரத்துக்குள் அதனை முறியடிக்கின்ற கட்டமைப்பை உருவாக்கியிருக்க வேண்டும்

அத்தகைய கட்டமைப்பை வெளிவிவகார அமைச்சு கொண்டிருக்கவில்லை

விடுதலைப்புலிகள் சார்பு அமைப்புகள் சொல்வதை இப்போதும் பலர் நம்புகிறார்கள். போர் தவிர்ப்பு வலயத்தில் ஆகக் குறைந்தது 10 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டதாக இப்போதும் பலர் நம்புகின்றனர்

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இலங்கை 3 முக்கியமான அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளது.

இதில் மிகவும் முக்கியமானது மேற்கு நாடுகளுடன் கொண்டிருந்த சிறப்பான உறவு சீர்குலைந்தமை.

குறிப்பாக பிரித்தானியா, கனடா, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளுடன் கடந்த காலங்களில் இருந்த மிகச்சிறந்த உறவு இப்போதில்லை

போரின் இறுதிக் கட்டத்தில் உண்மையில் என்ன நடந்தது என்று சரியாக விளக்கமளிக்கப்படாததால், புலிகள்சார்பு அமைப்புக்கள் சொல்வதை குறிப்பிட்ட வெளிவிவகார அமைச்சுகளும் அரசு சார்பற்ற நிறுவனங்களும் நம்புகின்றன.

இது இலங்கை எதிர்கொள்கின்ற மற்றொரு அச்சுறுத்தல் என்றும் பேராசிரியர் றொகான் குணரட்ன மேலும் தெரிவித்தார். (பா-1)

## பெறுபேறு...

பிரேமலால் டி சில்வா கொழும்பு, றோயல் கல்லூரி அதிபர் உபாலி குணசேகர ஆகியோர் இக் குழுவின் ஏனைய அங்கத்தவர் ஆவர். இக் குழு எதிர் வரும் இருவாரங்களில் தனது சிபார்சுகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடம் கையளிக்கவுள்ளது. (பா)

## 70 முன்னாள்...

என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சதீஸ் குமார் தெரிவித்தார்.

அமைச்சர் சந்திரசிறி கஜதீர தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் உட்பட சில முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். சுமார் 70 போராளிகள் ஜனவரி மாதம் 22ஆம் திகதி சமூகத்துடன் இணைக்கப்படவுள் ளதாக இது தொடர்பாக வெளியிடப்பட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# தமிழ் மக்களின் நிமிர்ந்தெழும் காலமாக புத்தாண்டு இருக்கட்டும்

## அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து

மலர்கின்ற புத்தாண்டில் எமது மக்களின் வாழ்வில் புதிய மகிழ்ச்சி ஒளி வீச வேண்டும் என்றும் அம்மகிழ்வானது கடந்த காலங்களை விடவும் முன்னோக்கி உயர்ந்து எமது மக்கள் யாவரும் நிமிர்ந்தெழுகின்ற ஒரு காலச்சூழலாக இருக்க வேண்டும் என்றும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, சுதந்திரமான வாழ்வு என்பது சகலருக்கும் பொதுவான மனித குலத்தின் பிறப்புரிமை.

யாரும் யாரையும் அடிமை கொள்ளாமல் எதற்கும் எவரிடமும் கையேந்தி நிற்காமல் சகல மக்களும் சரிநிகர் சமன் என்று நிமிர்ந்து நிற்பதே மகிழ்ச்சி தரும் வாழ்வாகும்.

கொடியதொரு வன்முறைச் சூழலுக்குள் தமது வாழ்வின் மகிழ்ச்சியை தொலைத்திருந்த எமது மக்களும் எமது வரலாற்று வாழ்விடங்களும் இருட்டில் இருந்து விடுபட்டிருக்கும் நிலையில் பிறந்திருக்கும் வெளிச்சத்தை நிரந்தரமாக்கி எமது மக்களுக்கான நிம்மதிப் பெருவாழ்வை நாம் வளர்த்தெடுக்க வேண்டும்.

மாறாக இதுவரை காலம்போல் எமது மக்களின் மகிழ்ச்சிக்காக என்று கூறி மறுபடியும் எமது மக்களை இருட்டில் தள்ளிவிடும் தவறுகளை எவரும் தொடர்வார்களேயானால் அது எமது மக்களின் மகிழ்ச்சிக்கு விரோதமான செயலாகும்.

எமது மக்களின் மீள்குடியேற்றங்களை மேலும் அர்த்தமுள்ளதாக வளர்த்தெடுத்து இன்னமும் எஞ்சிய மக்களையும் அவர்களது சொந்த வாழ்விடங்களில் மீள்குடியேற்றம் செய்தல்,யுத்த காரணங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டவர்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களின் நலன்களை தொடந்தும் கவனிப்பதோடு எஞ்சியுள்ளவர்களையும் விடுவிக்க உழைத்தல், சிதைந்துபோன எமது வரலாற்று வாழ்விடங்களை தொடர்ந்தும் அபிவிருத்தியால் தூக்கி நிறுத்துதல், சகல தொழிற்றுறை சார்தவர்களும் சுதந்திரமாக தொழில்புரியும் சூழலை மேலும் வளர்த்தெடுத்தல், தொழில் நிறுவனங்களை மேலும் உருவாக்குதல், கிராமிய கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல், கைத்தொழில் பேட்டைகளை அமைத்தல், வேலையற்ற சகலருக்கும் வேலைவாய்ப்புகளை வழங்குதல் இதுபோன்ற எமது மக்களுக்கான வாழ்வியல் உரிமைகளை வளமாக்கும் பணிகளாவே எம்மிடம் சுமத்தப்பட்டுள்ளன. இவைகள் தவிர எமது மக்களின் உயிர்த்துடிப்பாக விளங்கும் அரசியலுரிமை பிரச்சினை என்பது தீராப் பிரச்சினையாக நீடித்து வருகிறது. அரசியல் தீர்வு முயற்சிகளை வெளியே நின்று விமர்சிப்பதை விடவும் சகலரும் சேர்ந்துழைத்து அதில் பங்கெடுப்பதே ஆரோக்கியமான வழிமுறையாகும்.

இவ்வாறு தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, பிறந்திருக்கும் புத்தாண்டு எமது மக்களின் மனங்களிலும், வாழ்விடங்களிலும் ஒளிமயமான வாழ்வின் வருகையாக அமையட்டும் என்றும் தெரிவித்துள்ளார். (பா)

## மாகாணங்...

ளவிலான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கின்றது.

விரைவில் அரசியல் தீர்வை வழங்க முடியாமைக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மீதான பிரச்சினையே காரணமாகும். இதனைத் தொடர்ந்து இழுபறி நிலையில் வைத்துக் கொள்ள முடியாது. புது வருடத்தில் பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும். இதனூடாகவே விரைவில் தமிழ் மக்களின் அரசியல் உட்பட ஏனை பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்க வேண்டும்.

அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதில் சம்பந்தப்பட்ட இரு தரப்பும் பொது இணக்கப்பாடு ஒன்றுக்கு வர வேண்டும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார்.




## சிறுவர்...

வேண்டுமானால் அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அவர்களை வாழ்நாள் முழுவதும் சிறை வைத்தாலும் பரவாயில்லை. ஆனால் மன்னிப்பு அளித்து வெளியில் விடக்கூடாது. இது தொடர்பாக பாராளுமன்றத்தில் பேசவுள்ளேன் அத்தோடு கோரிக்கையாகவும் முன் வைக்கவுள்ளேன்.

மேலும் குடாநாட்டில் இவை அதிகரிப்பதற்கு முக்கிய காரணம் கடந்த கால யுத்தசூழல். யுத்தத்தால் இந்த நாட்டில் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது.அவை அனைத்தும் உடனடியாக கட்டுப்படுத்த முடியாது.

இருப்பினும் சர்வதேச சக்திகளின் அழுத்தங்களின் மத்தியிலும் ஜனாதிபதி நாட்டை முன்னேற்றி வருகின்றார். அத்தோடு சகல அரசியல் கட்சிகளும் இணைந்து செயற்பட முன் வரவேண்டும். அப்போது தான் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியும்.

இது தவிர பெற்றோர்கள், பிள்ளைகளை கண்காணிக்க வேண்டும். இளவயது கர்ப்பங்களையும் சிறுவர் துஷ்பிரயோகங்களையும் இயன்ற வரை இதன் மூலம் கட்டுப்படுத்த முடியும்.

தந்தையாலும், சகோதரர்களாலும் ஏனைய உறவினர்களினாலும் இளவயதில் கர்ப்பம் தரித்த பெண்கள் உள்ளனர்.

அத்தோடு துஷ்பிரயோகத்திற்கும் பல சிறுவர்கள் உள்ளாக்கப்பட்டுள்ளனர். இதனால் உள ரீதியாக பாதிப்புகள் அதிகம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் பொலிஸ் நிலையங்களிலுள்ள சிறுவர் மற்றும் மகளிர் விவகாரங்களுக்கான பிரிவுகளின் செயற்பாடுகள் போதுமானதாக இல்லை.

உரியமுறையில் அந்தப்பிரிவு நடைமுறைப்படுத்தப்படுவதில்லை சிறுவர், பெண்களுக்கு பிரச்சினைகள் ஏற்பட்டால் அவை வெளியில் தெரியாதவாறு பாதுகாத்துக்கொள்ளப்படவேண்டும்.

அப்போதுதான் பாதிக்கப்படுபவர்கள் முறைப்பாடு செய்ய முன்வருவார்கள் அதற்கான வசதிகள் எதிர்காலத்தில் அதிகம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்படுபவர்களை பாதுகாக்கும் நோக்குடன் 26 பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வடமாகாணத்தில் பணி புரிய இன்று (நேற்று) நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு 100 பட்டதாரிகளுக்கு சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டு நியமனம் வழங்கப்படவுள்ளது. இதனையும் பாராளுமன்றத்தில் பிரேரணையாக முன்வைக்கவுள்ளேன்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் போதிய வசதிகள் இன்றி இயங்கிவரும் 11 சிறுவர் இல்லங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளேன். வட மாகாணத்தில் 80 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்களும் நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டதோடு பெற்றோரை பிரிந்த நிலையில் இருந்து ஆயிரத்து 700 சிறுவர்கள் பின்பு பெற்றோர்களிடமும் உரிய பாதுகாவலர்களிடமும் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும் இந்த நாட்டில் சிறுவர் இல்லங்கள் அனைத்தும் படிப்படியாக மூடப்பட வேண்டும்என்பதேஎனது ஆசை.

சிறுவர் இல்லங்களில் உள்ளவர்களையும் ஏனையவர்கள் போல வாழ வைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தச் சந்திப்பில் யுஆர் பிரண்ட் பவுண்டேசன் நிறுவனத்தின் தலைவர் க.செவ்வேள், தேசிய பாதுகாப்பு அதிகார சபையின் யாழ்.மாவட்ட உள சமூக இணைப்பாளர் கௌதமன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (பா-6)




அரசறிவியல் அசோக்
B.A.(Hons) Po.Spe(PGDE)
1.ACADEMY OF LOGIC - யாழ்ப்பாணம்
2.சாயி அரசறிவியல் கல்லூரி -தாவடி
3.ஸ்ரார் கல்வி நிலையம் -சுன்னாகம்
4.சித்தி விநாயகர் கல்வி நிறுவனம்-மல்லாகம்
5 AMA கல்வி நிறுவனம் -அளவெட்டி
6.தாசன் கல்வி நிறுவனம் -பண்ணாகம்
7.சாயி அரசறிவியல் கல்லூரி - இணுவில்
(இணுவில் இந்துக் கல்லூரிக்கு அருகாமை)
(சி-5392)

கனடாவுக்கு 250/= 1Kg பொதிகளுக்கு LKR மட்டுமே
VISA MasterCard
கனடா AERO COURIER,
NPC Enterprises நிறுவனமும் இணைந்து இலங்கையில் இருந்து கனடாவுக்கு குறைந்த செலவில் நிறைவான சேவையினை வழங்கிவருகிறது.
Nation Popular Travels & Tours
இல 82 பிறவுன்வீதி யாழ்ப்பாணம்
(நாவலடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக)
யாழ்ப்பாணத்தின் அனைத்துப் பாகங்களிலும் இருந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். Mobile: 0772175503
Hotline 0114651199
NPC
Head Office No-16,1/2,E.S.Fernando Mawatta Colombo-06
0214920920

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

RRSC Motor Engineers

# R.R.S.C. மோட்டோர்ஸ் எஞ்சினியர்ஸ்


டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் அங்கீகாரம் பெற்ற மோட்டார் சைக்கிள், ஆட்டோ உதிரிப்பாக விற்பனையாளரும் சேவை முகவரும்

BAJAJ

## றஞ்சிற் மோட்டோர்ஸ்
## றஞ்சிற் றிப்பியரிங் அன்ட் சேவிஸ் சென்ரர்

எமது வாடிக்கையாளரின் நன்மை கருதி பின்வரும் சேவைகளை வழங்குகின்றோம்

- பஜாஜ் மோட்டார் சைக்கிள், ஆட்டோ உத்தரவாத இலவச சேவிஸ்
- இச் சேவையைப் பெற்றபின் தொடர்ச்சியாக சேவிஸினை பெறும் முறைகள்
- பஜாஜ் மோட்டார் சைக்கிள், ஆட்டோ உத்தரவாத இலவச சேவை





யாழ் வீதி, மானிப்பாய்.

தொ.பே : 0773107549,0772269883
சேவிஸ் : 021 3737808
உதிரிப்பாகம் : 021 2255228

(C-5386)

---

**A/L-2012**

(Day Class;)

நாளை ஆரம்பம்

கலை
திங்கள் – காலை 7 மணி

வர்த்தகம்
திங்கள் – காலை 8 மணி

DMI
Jaffna

---

எமது வாடிக்கையாளருக்கு மனமார்ந்த புது வருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்

# மயில்
## அழகுக்கலை நிலையம்
## போட்டோ & வீடியோ



மணப்பெண் அலங்காரம்
பேசியல் (Types of skin)
ஸ்ரெயிற்னிங்
றீபொன்டிங்
கெயார் கட்டிங், பெடிக்கியூர், மெனிக்கியூர், கேக் ஐசிங்,
பருவுக்கான சிகிச்சை மேலும் பல அழகுக்கலை அம்சங்களை செய்து கொள்ளலாம்.
(Wedding Packages & Special Wedding Packages are available)

T.P.: 0776914123
0774749101
021-4922023

இல.137, தபால் பெட்டி சந்தி
பலாலி றோட்,
திருநெல்வேலி.

(C-5380)

---

**D.C.M யாழ்.நகர்**
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
வரலாறு A/L
R.R.ஆனந்தன்
Day Class
திங்கள்,செவ்வாய்,வெள்ளி -8.00
ஆரம்பம்: 02.01.2012 திங்கள்
(7052)

---

A/L DAY CLASS
**கலை வர்த்தகப் பிரிவு**
ஆரம்பம் : ஜனவரி 02 காலை 8.00
புதிய பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ் நகர்.(பெருமாள் கோவில் அருகாமை)

---

A/L DAY CLASS
**கலை வர்த்தகப் பிரிவு**
ஆரம்பம் :
ஜனவரி 02 காலை 8.00
**NEC**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

---

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், முதலீட்டாளர்கள் அனைவருக்கும் எமது புது வருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்





# TOUCHWOOD

- யாழ்ப்பாண முதலீட்டாளர்களே உங்களுக்காக பாதுகாப்பானதொரு முதலீட்டுத் திட்டத்தை Touchwood நிறுவனம் அறிமுகப்படுத்துகின்றது.
- இயற்கையானதும் பாதுகாப்பானதும் நிலையானதுமான இம் முதலீட்டுத்திட்டம் முழு காப்புறுதியினையும் கொண்டுள்ளது.
- Touchwood ஆனது உலகம் பூராகவும் கிளைகளை விஸ்தரித்து மொத்தமாகவும் சில்லறையாகவும் முதலீடு செய்யக்கூடிய ஒரு பொன்னான வாய்ப்பை வழங்குகின்றது.
- பங்குகள், முறிகள் மற்றும் வீடு, நிலம் போன்ற சொத்துக்களையும் விட பெறுமதியானதாக இந்தச் சந்தன மரம் காண ப்படுகிறது.
- Touchwood ஒரு உலகளாவிய அடையாளச் சின்னம்

மரங்கள் மீது பணம் வளர்வதில்லை
எமது மரங்களுடன் அது வளர்கின்றது

## TOUCHWOOD இல் முதலீடு செய்வதற்கான 15 காரணங்கள்

01. 2010ஆம் ஆண்டிற்கான தேசிய தரவட்ட விருதினை வென்றது. (உற்பத்தியிலும் சேவையிலும் முதலாவது இடம்).
02. 12 வருட கால நிலையான வரலாற்றைக் கொண்டது.
03. ஒரே ஒரு வனப்பரிபாலனம் செய்யும் பொதுநிறுவனம். Public Agro- Forestry Company (100% வெளிப்படையானது)
04. தெற்காசியப் பிராந்தியத்திலேயே ஒரே ஒரு ISO- 9001, 14001 தரச் சான்றிதழ்களை பெற்ற நிறுவனம் (Agro- Forestry Company)
05. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் இணக்கச் சான்றிதழ் விருதை பெற்றது. (Certificate of Compliance)
06. 2007முதல் அறுவடை இலாபத்தினை வழங்கிவருகின்றது. (உறுதிப்படுத்தப்பட்ட வியாபார முறை)
07. அனைத்து தோட்டங்களும் முதலீட்டுச் சபையினாலும், வனப்பரிபாலன சபையினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
08. முழுச் சொத்துக்களுக்குமான சொத்து மீளளிப்பு முதலீட்டை அதன் உரிமையாளரின் உறுதிச்சான்றிதழில் குறிக்கப்பட்டபடி பெற்றுக் கொள்ளலாம்.
09. 100% சொத்துப் பொறுப்புடனான முதலீடு (நிலத்துக்கான உரிமையும், உறுதியும் முதலீட்டாளருக்கு வழங்கப்படும்.)
10. 100% மான மேலதிக சொத்துக்களின் இருப்பு (கணக்காய்வாளர்களினால் கணக்கிடப்படுகின்றது)
11. தற்போதைய சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்குமான விகிதம் 4:1 (பொறுப்பு ஒரு மடங்கு எனில் சொத்து நான்கு மடங்கு)
12. உலகப் புகழ்பெற்ற விவசாய ஆலோசனையும், கணக்காய்வும்.
13. உலகின் எட்டு நாடுகளுக்கான விரிவாக்கம்.
14. சொத்து மீள் அளிப்புக்கும் மற்றும் பணம் மீள் அளிப்புக்குமான உத்தரவாதம்.
15. ஆராய்ச்சி மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த 10 வருட கால சந்தன மரச் செய்கையின் முன்னோடிகள்.



# Touchwood Investments PLC

TOUCHWOOD

No.207, Navalar Road, Jaffna.
Tel: 021 7390200

www.touchwood.com

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# புதுவருட சிறப்பு மலர்-01.01.2012


எல்லோருக்கும் எமது இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

அழகுக்கு அழகு செய்யும் நவீன அழகிய டிசைன்களில் தங்க, வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்




ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்

இல:10, பஸ் நிலையம், சங்கானை

கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை)





- குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தி அடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- தாம் விரும்பிய நேரங்களில் வாகன பயிற்சி வழங்கப்படும்.
- சாரதி அனுமதி பத்திரத்திற்கான மருத்துவ சான்றிதழ் (மெடிக்கல்) எமது காரியாலயங்களிலே பெற்றுக் கொள்ளலாம்.

பெண்களுக்கு: நவீன காரில் பயிற்சி வழங்கப்படும் 021 492 3200 (கவிதா)



தலைமைக் காரியாலயம்:- 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:- 021 222 4353

கிளை :- கிளிநொச்சி T.P:- 021 228 5505

கிளை :- நெல்லியடி T.P:- 021 300 6550

கிளை :- விசுவமடு T.P:- 021 320 1515


கிளை :- A-9 வீதி, சாவகச்சேரி T.P:- 021 492 3202, 021 320 1818

அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

உடல் வளர்ச்சிக்கு

ஜீவாகாரம்

உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம் சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்தசத்துணவு. இரசாயனக் கலவை அற்றது




உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது

அன்னா தயாரிப்புக்களே!

அண்ணா கோப்பி
அண்ணா அரிசி மா
குரக்கன் மா
ஆட்டா மா
அண்ணா மிளகாய்த் தூள் வகைகள்
அண்ணா பத்தி வகைகள்
அண்ணா பற்பொடி
அண்ணா இனிப்பு வகைகள்

அண்ணா தொழிலகம் இணுவில்


தொலைபேசி இல: 021 224 1565

அனைவருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

ராம்கோ சீமெந்து

RAMCO CEMENT



ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்! உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!

ஆசியாவின் முதலாம் தர(நம்பர்-1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட RAMCO சீமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- இலங்கையின் SLS 107 தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
- 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சீமெந்து
- மிகமிக உயர்தரம் கொண்ட சீமெந்து
- ISO 9001 உலகத்தர சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து

ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்

ஐஸ்வர பகவான் அன் கம்பனி

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொ. பே: 021 222 7603, 021 222 2350

# புதுவருட சிறப்பு மலர்-01.01.2012

தித்திக்கும் தேனமுதம் பிறக்கட்டும் இனிய புதுவருடம்

நத்தார் புதுவருடத்தைமுன்னிட்டு எமது மூன்று கிளைகளும்

நியாயமான விலையிலும் விசேட விலைக்கழிவுடனும் பெற்றுக்கொள்ளலாம்.

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு 7 நாட்களும் திறந்திருக்கும்





## *Nallur Saravana Tex*

## நல்லூர் சரவணா ரெக்ஸ்

இல. 526,529,பருத்தித்துறை வீதி
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 1723

இல. 770, 772, தட்டாதெருச் சந்தி,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே :- 021 222 0421

இல. 171,பிரதான வீதி
சம்பத்வங்கிக்கு அருகாமை,
நெல்லியடி.
தொ.பே:- 021 226 2992

---

மலரும் புத்தாண்டு மகிழ்ச்சியாக அமைய வாழத்துக்கள்

## V.S.P லக் ஒயில்

தயாரிப்பாளரும்
ஏக விநியோகஸ்தரும்

## பரிமளா ஸ்ரோர்ஸ்

இல:26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 0212224135, 0212229165

---

அனைவருக்கும் எமது புத்தாண்டு நல் வாழ்த்துகள் உரித்தாகட்டும்



## கிருஷ்ணா நகை மாளிகை



குறித்த நேரத்தில் குறித்த தவணையில் தரம் குன்றாத 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

கிளை : கிருஷ்ணா அடகுக்கடை இல- 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

இல- 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5046

---

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்




## வேல் முருகன் வாணிப நிலையம் VELMURUGAN TRADERS

தற்கால நவநாகரிக கட்டடங்களுக்கு ஏற்ப சகல விதமான வர்ண
பெயின்ட் வகைகளும், சுண்ணாம்பு மற்றும் கட்டடப் பொருள் விற்பனையாளர்.

இல.56A,295A மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9437

---

*மலரும் புத்தாண்டு மகிழ்ச்சியாக அமைய வாழ்த்துக்கள்*

## Peninsula Super Mall

Super Market Services

*சகல பொருட்களையும் ஒரு கூரையின் கீழ் ஒரே நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

PSM



2000/- தொகைக்கு பொருட்களை கொள்வனவு செய்யும் அதிஷ்ரசாலிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன

வகை வகையான தரமான அனைத்து
பொருள்களை பெற்றிட இன்றே நாடுங்கள்...

**Parking Facility Available**

PSM

No: 127, Kandy Road,
Kachcheri,
Jaffna.
021 222 1848
psmjaffna@gmail.com

பொதி செய்யப்பட்ட பலசரக்கு பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள்
பால்மா வகைகள்
ஐஸ் கிறிம் வகைகள்
குளிர்பானங்கள்
பழ வகைகள்
பழ ரசங்கள்
இறைச்சி வகைகள்
அன்பளிப்பு பொருட்கள்
கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துமடல்கள்
கேக் தயாரிக்கும் பொருட்கள்

---

## மலர்வாய் புத்தாண்டே!

*காலை இளம்பனிக் காற்றில் அசைந்து*
*குலுங்கும் மலர்களைப் போல*
*நிலா மலர்ந்த இரவினில் தென்றல்*
*குலாவிடும் நதியைப்போல*
*மாலை வரும்பசுக் கூட்டங்கள் கன்*
*டாயர்கள் மகிழ்தல் போல*
*மாலை போல வருதுன்ப துயரங்கள் நீக்கிட*
*மலர் வாய் புத்தாண்டே!*

கலாபூசணம் மு.தணிகாசலம்
கற்கோவளம்.

---

அனைவருக்கும் புத்தாண்டுவாழ்த்துக்கள்

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் துல்லியமான பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்னரைவிட உறுதியான, அழகான் வெண்சங்குப் பற்களைக் கட்டிட- இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.

## எரிக்கணேஷ்



மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்

இல 564,566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 2486

கிளைகள்:
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

# புதுவருட சிறப்பு மலர்-01.01.2012

## வாசுதேவக் குருக்களின் வாழ்த்துச் செய்தி

மதங்கள் கடந்த ஆன்மீக அன்பு மலர்கள் மலரட்டும். எண்ணத்திலும் செயலிலும் இனத் தால், மொழியால், மதத்தால் சண்டையில் லாத நட்பு மலரட்டும். எம்மக்களுக்கு மலராத மொட் டாக இருக்கும் சமாதான தீர்வும் மலரட்டும். வாழ்வாதாரம் எட்டாத வன்னி மக்கள் வாழ்வு மலரட்டும். இவ்வாறு சர்வதேச இந்து மதகுரு ஒன்றிய தலைவர் சிவ ஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவரது வாழ்த்துச் செய்தியல் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

இளையவர்களை பீடிக்கும் தீய ஒழுங்கீனங்கள் மறைந்து நல்லொழுக்கம் மலரட்டும். மாதர்களை மயக்கும் தொடர் நாடகங்கள் தொலைந்து மாதர்கள் வீறு நடை மலரட்டும். குறைபாடுள்ள மாணவர்களை மூலதனமாக்கி ஆசிரியர்கள் பணி மலரட்டும். மக்களுக்கு அர்த்தமுள்ள வாழ்வு மலரட்டும். ஏழைகளுக்கு உவந்தளிக்க கணக்குப்பார்க்காத கருணை உள்ளம் மலரட்டும். பிரசாரம் மில்லாத மதங்கள் மலரட்டும். தன்னைப்புகழும் தலைவர்கள் அகன்று சமூகநலன் காக்கும் பணியாளர்கள் மலரட்டும். வேலியே பயிரை மேய்க்காத காவல் துறை மலரட்டும். வாசகர்களுக்கு உணர்த்த வேண்டியவற்றினை உணர்த்தும் காலம் அறிந்து உணர்த்தும் பத்திரிகைகள் மலரட்டும். நல்லவனவற்றினை எல்லாம் சுமந்து ஆங்கிலப் புத்தாண்டு மலரட்டும். மனதார வாழ்த்தும் மனங்கள் மலரட்டும்.

## புத்தாண்டு புதிய உத்வேகமான ஆண்டாக மலரட்டும்



*சிவ ஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகரின் வாழ்த்துச் செய்தி!*

இன்று புதுவருடப்பிறப்பு. இப்புத்தாண்டில் ஆண்டவனின் அருளும் ஆசியும் அன்பும் கிட்ட ஆசி கூறுகின்றேன். இவ்வாறு அகில உலக சைவக் குருமார் சம்மேளன பிரதமகுரு சிவ ஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவரது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

அந்த நம்புக்கையுடன் இவ்வாண்டை ஆரம்பிக்கும் போது கடந்த ஆண்டையும் நினைத்துப் பார்க்கின்றோம். இப்படியாக ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் அடுத்த ஆண்டு மலரும் போது எமக்கு ஏதாவது கடந்த ஆண்டைவிட அதிக நன்மை கிடைக்குமென்ற ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். ஆனால், நடப்பது ஒன்றுமில்லை. எனவே, இப்புத்தாண்டிலாவது அனைவருக்கும் நன்மை பயக்கும் புதிய உத்வேகமான ஆண்டாக மலர எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வேண்டிப் பிரார்த்தித்து புத்தாண்டு ஆசிகள் அனைவருக்கும் கூறி வாழ்த்துகின்றேன்.

**சர்வோ ஜனகா சுகினோ பவந்து**
**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!**

## பிடிவாதப் போக்கு மாறி அரசியல் தலைவர்கள் ஒன்றிணைய வேண்டும்



*யாழ். ஆயரின் புதுவருட வாழ்த்துச் செய்தி*

2012 புதிய ஆண்டை இறை நம்பிக்கையோடு தொடங்குவோம். இவ்வாண்டு தமிழ் மக்கள் அனைவருக்கும் மகிழ்வும்அமைதியும் பாதுகாப்பும் சுபீட்சமும் நிறைந்த ஆண்டாகட்டும் என பாலக இயேசுவின் பெயரால் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை முதலில் தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது வாழ்த்துச்செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கடந்த ஆண்டையும் நாம் நம்பிக்கையோடு தான் தொடங்கினோம். நாம் நம்பிய சில செயல்கள் நிறைவு பெற்றன. பல அவநம்பிக்கையாய் போய் விட்டன. யுத்தத்தினால் இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தம் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டது ஒரு நன்மையான காரியமாகும். இருப்பினும் இது முற்றுமுழுதாக நடைபெறவில்லை. மேலும் பலர் தம் சொந்த கிராமங்களுக்கு இன்னும் போகமுடியாது உள்ளமை வருத்தத்திற்குரியதாகும். ஏற்கனவே தம் சொந்த இடங்களில் குடியமர்ந்தவர்கள் கூட தமது உறைவிடம், வாழ்வாதாரம் போன்ற அநேக தேவைகளை நிறைவு செய்ய முடியாதவர்களாக அல்லல்பட்டு கொண்டுள்ளனர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலான தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய அரசியல் தீர்விற்கான வழி ஒன்று பிறக்கும் என கடந்த ஆண்டில் நம்பியிருந்தோம். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் இதற்கு உதவும் என எதிர்பார்த்திருந்தோம். இன்று பேச்சுவார்த்தை இறுக்கமான ஒரு கட்டத்தை அடைந்து பேச்சுவார்த்தையே இல்லாமல் போய்விடுமோ என்ற அச்ச நிலையே உருவாகியுள்ளது.

புதிய ஆண்டில் அரசியலிலும் புதிதான மாற்றம் ஏற்படவும் பிடிவாதப் போக்கு மாறி அரசியல் தலைவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நீதியோடு கூடிய நிரந்தர தீர்வினை வழங்க வேண்டுமென இறைவனை உருக்கமாக வேண்டி நிற்கின்றோம் என அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## இந்நாள் வரை பட்டதுயரங்களும் துன்பங்களும் அறவே விலக வேண்டும்



***நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி!***

இன்று புதுவருடபிறப்பு நன்னாள். இற்றை நாள் வரை பட்டதுயரங்களும் துன்பங்களும் அறவே விலகி இன்று முதல் எல்லோரும் மகிழ்ச்சியுடன் மங்கலகரமான மாண்பு மிக்கவாழ்வுக்கு இவ்வருடம் அடிகோல வேண்டுமென்று வாழ்த்துகின்றோம். இவ்வாறு நல்லை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தனது புத்தாண்டு அருளாசிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவரது புத்தாண்டு அருளாசிச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

இவ்வாறு நல்லை ஆதீனக் குரு முதல்வர் தனது அருளாசி. எமது இலங்கை வாழ் மக்கள் அனைவரும் சுபீட்சமான சந்தோஷம் நிறைந்த சமாதானமுள்ள இனிய இன்ப வாழ்வு வாழ வேண்டுமென்று எமது வணக்கத்துக்குரிய நல்லைக் குருமணியின் பொற்கால பாதம் பணிந்து அருளாசிகள் நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்று அப்பர் பெருமான் கூறுவது போல இனியாவது துன்ப துயரங்கள் இன்னல் இடுக்கண்கள் விலகி எல்லோரும் இன்புற்றிருக்க எல்லாம் வல்ல நல்லைக் கந்தனின் பொன்னான திருவடிகளைப் பணிந்து ஆசி நல்கி உளமாரப் பிரார்த்தித்து இறும்பூ தெய்துகின்றோம்.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு.**

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



2011 ஆம் ஆண்டிற்கு விடைகொடுத்து 2012 ஆம் ஆண்டை வரவேற்கத் தயாராகும் அனைவருக்கும் ஒளிமயமான ஆண்டாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து எனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

பழையன கழிதலும் புதியன புகுதலும் எனும் முதுமொழிக்கிணங்க நாம் அனைத்து வேறுபாடுகளையும் களைந்து ஒரு மனத்தினராக ஒன்றிணைந்து இந்நாட்டு மக்களுக்காக முழுமனதுடன் செயற்படுவதன் மூலம் மக்களின் வாழ்வாதார நிலை மேன்மையடைந்து பொருளாதார நிலை உயர்வடைந்து வாழ்க்கை நிலை மேலோங்க வழிவகுக்கும் எனத் தெரிவித்து அச்சமற்ற அமைதியான சூழல் பூத்திருக்கும் இவ்வேளையில் மக்களின் வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தி அவர்களுக்குச் சுபீட்சமான எதிர்காலம் ஒன்றைப் பெற்றுக்கொடுக்க அனைவரும் திடசங்கற்பம் பூணவும் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளின் மூலம் மறுமலர்ச்சி கண்டுவரும் இம்மாவட்ட அனைத்து மக்களும் மன மகிழ்ச்சியுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து எனது புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## மலரும் புத்தாண்டு சுபீட்சத்தையும் மனநிறைவையும் வழங்க வேண்டும்



*வடமாகாண ஆளுநரின் புதுவருட வாழ்த்துச் செய்தி*

வடமாகாண மக்களுக்கு புதுவருட வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த மூன்று தசாப்தங்களாக பெரும் இன்னல்கள் மத்தியில் வாழ்க்கையை நடாத்திய வடமாகாண மக்களுக்கு மலரும் புது ஆண்டு மனநிறைவையும் சுபீட்சத்தையும் குறைவிலாது வழங்கும் என்பதில் அபார நம்பிக்கை கொண்டுள்ளேன். இவ்வாறு வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தனது புது வருட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நடந்தேறிய யுத்தத்தின் பின்னர் வடமாகாணத்தை பொறுத்தவரையில் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட திட்டங்கள் பல மாண்புமிகு ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனையின் வழி காட்டல்களுக்கு அமைய உரிய கால எல்லைக்குள் அமுலாக்கப்பட்டுள்ளன என்பதனை இத்தருணத்தில் கூற விரும்புகின்றேன். மேலே குறிப்பிட்ட இந்தக் கால எல்லைக்குள் ஏறக்குறைய 3 இலட்சத்து 50 ஆயிரம் உள்ளூர்களில் இடம்பெயர்ந்த வடமாகாண மக்கள் அவர்களுடைய சொந்தக் கிராமங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் தமது முந்தைய வாழ்க்கைத் தரத்தினை துரிதமாக அடைவதற்கு ஏதுவாக பல்வேறு வேலைத்திட்டங்கள் அமுல் செய்யப்படுகின்றன.

புதுவருடம் பிறக்கும் போது நாங்களும் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்க வேண்டும். எனவே, இச்சந்தர்ப்பத்தில் அரச சேவையில் இருக்கும் அனைவரையும் நான் கேட்கக் கொள்வதென்னவென்றால் தாங்கள் அனைவரும் அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்த ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## செஞ்சொற் செல்வரின் வாழ்த்துச் செய்தி



இனிய புத்தாண்டை இன்முகத்துடன் வரவேற்போம். புதிய ஆண்டில் பல நற்காரியங்களைச் சாதிப்பதற்கு ஆயத்தமாவோம். கடந்து செல்லும் ஆண்டில் கடவுள் தந்த பேறுகளுக்கு நன்றி கூறுவோம். இவ்வாறு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளவை, விட்ட தவறுகளுக்கு இறைவனிடம் மன்னிப்புக் கேட்போம். மனித வாழ்வின் மகத்துவத்தை உணர்ந்து அரிய வாய்ப்புக்களைப் பயன்படுத்துவோம். எங்கள் நாட்டில் நீதியும் நிம்மதியும் சிறக்க இறைவனை மன்றாடுவோம். இரக்கமில்லாத மனிதர்களால் வரும் இடையூறுகள் அற்றுப் போக வேண்டுதல் செய்வோம். இந்நாட்டில் இனிய உறவுகளை இழந்தவர்களின் வேதனையைத் துடைக்க முயற்சி செய்வோம். எந்தக் குற்றமும் இழைக்காது விதியால் விலங்குடன் இருப்பவர்கள் விடுதலைக்காகப் பிரார்த்திப்போம். தம்பிள்ளைகளின் வருகைக்காக கண்ணீரோடு காணாமல் போனவர்கள் தொடர்பாக நடைபெறும் நிகழ்ச்சிகளில் எல்லாம் நினைந்து கலங்கும் தாய் தந்தைக்கு விமோசனம் கிடைக்க வேண்டுதல் செய்வோம்.

அனைத்து மக்களுக்கும் உரிமையும் ஒற்றுமையும் உண்மையான வாழ்வும் கிடைக்க ஒன்றுபட்டுப் பிரார்த்திப்போம். புதிய ஆண்டு அனைவருக்கும் நன்மை பயக்க இறைவனை வேண்டி நல்வாழ்த்துக் கூறி அமைகிறேன்.

## ஈ.பி.டி.பி.யாழ். மாவட்ட அமைப்பாளரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



மலரப் போகும் புதுவருடத்தில் எமது மக்கள் எதிர்நோக்கி வரும் இன்னல்களுக்கு நிரந்தரத் தீர்வொன்று கிடைக்க வேண்டி நம் தமிழ் தலைமைகளுக்கிடையே இணக்கமான புரிதலொன்றுக்காக உழைக்க அனைத்து தரப்பினரும் முன்வருவது காலத்தின் கட்டாயமாகும் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நிலையான சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் அதற்கான இணக்கப் பேச்சுக்கள் வெளிசக்திகளிடத்தில் அல்ல. மாறாக அது சக தமிழ்க்கட்சித் தலைமைகளுடனேயே முதலில் இடம்பெற வேண்டும். தமிழ் மக்களுக்காக எதனை நாம் அரசுடன் பேச வேண்டும் என்பதில் எமது தமிழ் தலைமைகள் இணக்கமொன்றுக்குள் வர முடியாத நிலையில் கூட்டான தீர்மானமொன்றை அரசுக்கு விடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையினையே தமிழ்த் தரப்புக்கள் எதிர்கொண்டுள்ளனர். முதலில் இந்த நிலை மாற வேண்டும். எவ்வித முரண்பாடான நிலையிலும் எமது மக்களுக்கான ஒரே மேசையில் அமர்ந்து பேசுவதற்கான மனநிலையை எமது ஒவ்வொரு தமிழ்த் தலைவர்களும் கொண்டிருப்பது தீர்வு நோக்கிய முயற்சிகளுக்கு அவசியமானதொன்றாகும் எனவும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டார்.

## வடமாகாண பிரதம செயலாளரின் வாழ்த்துச் செய்தி



மனிதநேயத்துடன் மக்களுக்குச் சேவையாற்றுவோம் என்ற அரசின் குறிக்கோளுடன் 2011 இல் திறம்மிக்கதாய் மக்களுக்கு சேவையாற்றி 2012 இல் ஆசியாவின் ஆச்சரியமாக இருப்பதற்கு நாட்டினைக் கட்டியெழுப்புவோம் என வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ்-விஜயலட்சுமி தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

2012 புது வருடத்தை இனிமையுடன் வரவேற்கும் அதேவேளை அனைத்து மக்களும் இனமதபேத வேற்றுமைகளின்றி **ஒரே தேசம் ஒரு தாய் பிள்ளைகள்** என்ற கோசம் எங்கள் அனைவரின் காதினுள்ளும் இனிய நற்கீதமாய் என்றும் ஒலிக்க பிறக்கும் புத்தாண்டை புத்தொளி வீச வரவேற்போமாக,

அழகுற பிறக்கும் இப் புதிய ஆண்டில் வட மாகாணத்தின் அலுவலர்கள் நாம் அனைவரும் ஒருசேரக் கைகோர்த்து அர்ப்பணிப்புடனும், நேர்மையுடனுமான நிறைவான மக்கள் வழிநின்ற சேவையினூடு மாகாண அபிவிருத்தியின் கண் நாட்டினது அபிவிருத்திக்காகச் சேவையாற்றுவோம் என்பதை நம்பிக்கையுடன் கூறுகின்றேன்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பதற்கிணங்க எம் இந்நிறை பணி சிறந்தோங்க அனைத்து மக்களும் ஒன்றிணைந்து சுபீட்சமான எதிர்காலத்தினூடான நலம் மிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம் வாரீர்!!! என மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# புதுவருட சிறப்பு மலர்-01.01.2012


புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

## அசோகா நகை அகம்

இல:111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 6290

நம்பிக்கை நாணயம்–உத்தரவாதம்

22 கரட் தங்க நகைகளுக்கு

ASOKA JEWELERS



மலரும் புத்தாண்டு மகிழ்ச்சி நிறைந்ததாய் அமைய வாழ்த்துகின்றோம்

## ஆர். வி.ஜி மருந்தகம்

504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.

தொ.பே.இல: 021 222 2129

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## R.V.G ஸ்தாபனம்

58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தொ. பே. இல : 021 222 6806

யாழ். நகரில் மீண்டும் புதுப்பொலிவுடன்

## குமார் ரெக்ஸ் KUMAR TEX

மொத்த புடைவை வியாபாரம்

இல.127/14, யுமிலிபயார், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:-ப.பத்மகுமாரன், யோகாஸ் புடைவையகம்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சாரி, சல்வார், சேட், ரீசேட் வகைகள், டவுசர் வகைகள், பெண்களுக்கான சிறந்த பட்டுப் புடைவைகள் மற்றும் அனைத்துத் துணி வகைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்

## விනு ரெக்ஸ் VINU TEX

15,16, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 3215948, 021 222 3918



புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

## J.T ரான்ஸ்போட்

யாழ் ➞ கொழும்பு

கொழும்பு ➞ யாழ்

சகல விதமான பொருட்களும் நியாயமான கட்டணத்தில் கொண்டு வந்து தரப்படும்



TVS மோட்டார் சைக்கிள்களின் டயர்களின் யாழ். விநியோகஸ்தர்




40 வருடகால மதிப்போடு விளங்கும்

## யாழ். வணிக நிலையம் Jaffna Traders

இல.336, 338, (மேல்மாடி) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

குழந்தைகளின் பால்மா, பிஸ்கற் வகைகள், பெண்களுக்கான கிறீம் வகைகள், குளிரூட்டப்பட்ட அங்கர்பட்டர், மாஜரின் வகைகள், குரக்கன், எள்ளு, தேயிலை மற்றும் சகல வகைப் பொருட்களையும் ஒரே இடத்தில் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

J.T ரான்ஸ்போட்

இல.302,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.